## அரசு ஊழியர்

டிசம்பர் 2017

மலர் : 38 இதழ் : 12

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


### சூடாக ஒரு கோப்பை சூப்

**யார் நீ?**

யாரோ விட்டெறிந்த கல்லுக்கு
என் மீது கோபப்பட்ட தேனீ
முகத்துக்கு முன்னே வந்து நின்று
''யார் நீ? சாதாரண மனிதனா?
போர் வீரனா?'' என்று கேட்டது.

எனக்கொன்றும் புரியவில்லை.

''போர் வீரன் எல்லாவற்றையும்
சவால்களாக எடுத்துக் கொள்வான்;
சாதாரண மனிதன் சாபங்களாகவோ
ஆசீர்வாதங்களாகவோ ஏற்றுக்கொள்வான்.
யார் நீ?'' என்று கேட்டது.

எனக்கு ஒன்று மட்டும்
புரிந்து விட்டது,
இந்தக் கணத்திலிருந்து
நான் போர் வீரனாகிவிட
வேண்டுமென்று!

- *(மூலம்)* டான் ஜுவான்

# புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவதாகக் கூறி நடக்கும் நம்பிக்கை துரோக நாடகங்கள்!

**2011**ம் ஆண்டில் ஜெயலலிதா அம்மையார் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் வாக்குகளை பெறுவதற்காக "அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் புதிய பென்சன் திட்டம் திரும்பப் பெறப்படும்'' என்று தேர்தல் அறிக்கையில் தெரிவித்தார். அரசு ஊழியர்கள்/ ஆசிரியர்களுக்கு அந்த வாக்குறுதி, நம்பிக்கை அளிப்பதாக இருந்ததால்தான் அவர்கள் ஜெயலலிதா வுக்கு வாக்களித்தார்கள், அவரும் ஆட்சியமைத்தார். ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு "அப்படி ஒரு வாக்குறுதி எப்போது அளித்தேன்?'' என்பது போல அதைப்பற்றி கண்டுகொள்ளாமலேயே இருந்தார். அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் இது குறித்து பலமுறை கோரிக்கை வைத்தும், அவரை நேரில் சந்தித்து கோரிக்கைகள் குறித்து பேச நேரம் கேட்டும் அவர் கடைசி வரை நேரம் கொடுக்காமல் இழுத்தடித்து வந்தார். 2016ல் தேர்தல் நேரம் நெருங்கிய நிலையில் அரசு ஊழியர் சங்கம் புதிய பென்சன் திட்டத்தை திரும்பப் பெறுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்தத்தைத் மேற்கொண்டபின்னர், அப்போது நடந்து கொண்டிருந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே சட்டமன்ற விதி எண்.110ன் கீழ் 11 அறிவிப்புகளை அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக வெளியிட்டார். அவற்றில் ஒன்றுதான் புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க சாந்தா ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ். தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்படும் என்றும், அது சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து மூன்று மாதங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்யும் என்றும் அந்த அறிக்கையின் பேரில் அரசு முடிவெடுக்கும் என்றும் தெரிவித்திருந்ததாகும்.

திருமதி சாந்தா ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ். தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதாகக் கூறி நான்கு முறை நீட்டிக்கப்பட்டு, ஜெயலலிதா அவர்கள் மறைவுக்குப் பின்னர் அது என்ன ஆனது என்று தெரியாமலேயே கைவிடப்பட்டு, பிறகு மீண்டும் ஜாக்டோ-ஜியோ போராட்டக் களம் கண்டபிறகு ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ்.தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு நவம்பர் 2017க்குள் அறிக்கை அளிக்க உத்தரவிடப்பட்டது. புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்வது குறித்து பரிசீலிக்க ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, ஒரு வருட காலத்திற்கும் மேலாக அதை பரிசீலித்து அறிக்கை

அளிக்காததிலிருந்து அரசின் மைண்ட் வாய்ஸ் என்ன என்பது சாமானிய அரசு ஊழியர்கள் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடியதே.

ஏற்கெனவே அமைக்கப்பட்ட திருமதி.சாந்தா ஷீலா நாயர் அவர்கள் தலைமையிலான வல்லுநர் குழு வேண்டுமென்றே நான்கு முறை நீட்டிக்கப்பட்டதையும், நான்காவது முறையாக அதன் காலக்கெடு முடிந்தபிறகு மேலும் நீட்டிக்கப்படாமல் விடப்பட்டதையும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் போராட்டத்திற்குப் பின்னர் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் திரு. ஸ்ரீதர் அவர்கள் தலைமையில் மீண்டும் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அது நவம்பர் 2017க்குள் அறிக்கையை அளிக்கும் என அறிவித்தபோதே நாம் அதை “இதுவும் ஒரு கண்துடைப்பு நாடகமே'' என சுட்டிக்காட்டியதை ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பிலுள்ள தோழமைச் சங்க நிர்வாகிகள் சிலர்கூட எதிர்மறை வாதம் பேசுவதாக எடுத்தியம்பினார்கள். நாமும் இதுவரை நமக்கிருந்த அனுபவங்களின் வாயிலாக அப்படித்தான் நடக்கும் என அறுதியிட்டுக் கூறினோம்.

அவர்கள், முதல்வர் நம்முடைய கோரிக்கைகளை பரிசீலிக்க அவகாசம் அளிக்க வேண்டும் என அறிவுறுத்தியதோடு அல்லாமல், எந்தவித ஆதாரமும் இல்லாமல் “முதல்வர் கண்டிப்பாக உறுதி கொடுத்துள் ளார் அதனால் நாம் போராட்டத்தை தொடர வேண்டாம்'' என போராட்டக் களத்திலிருந்து விலகிக்கொண்டதோடு மட்டுமல்லாமல், போராட்டக் களத்தில் இருந்தவர்களை யும் போராட்டத்தை கைவிடச் சொல்லி வலியுறுத்தி போராட்ட வலிமையை குறைக்க முயற்சி செய்தனர்.

அரசாங்கத்தின் அடிவருடிகளாக மாறிவிட்டு கூட்டமைப்பிலிருந்து கழன்று கொண்டவர்களைப் பற்றி நாம் கவலைப்படாமல், உடன் இருக்கின்ற தோழமைச் சங்க உறுப்பினர்களைக் கொண்டு போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம். நீதிமன்றத் தலையீட்டின் காரணமாக போராட்டம் திசைமாறிச் சென்றாலும் நாம் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நமது உரிமைகளை அழுத்தமாக வலியுறுத்தி யதன் காரணமாக, அரசு வழக்குரைஞர், பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீதர்குழு நவம்பர் 30ம் தேதிக்குள் அறிக்கையை நிச்சயம் தாக்கல் செய்யும் என்றும் அந்த அறிக்கையின் பேரில் அரசு, உரிய முடிவை விரைந்து எடுக்கும் எனவும் தெரிவித்தார். அதை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையும் தனது இடைக்கால உத்தரவில் பதிவு செய்தது.

இருப்பினும் 30.11.2017 அன்று ஸ்ரீதர் குழுவின் அறிக்கை அரசுக்கு தாக்கல் செய்யப்படும் என அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் காத்திருந்த நிலையில் அரசுத் தரப்பிலிருந்து டாக்டர் டி.எஸ்.ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ் (ஓய்வு) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழு அறிக்கை எதுவும் தாக்கல் செய்ததாக செய்திகள் எதுவும் வரவில்லை. இது நம் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

டாக்டர் டி.எஸ்.ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ் (ஓய்வு) தலைமை யிலான வல்லுநர் குழு அமைத்தது தொடர்பான அரசு செய்திக் குறிப்பில் மேற்கண்ட குழுவானது “மத்திய அரசு புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை (PFRDA) மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய 21.10.2016 அன்று ஒரு குழுவை அமைத்தது, இந்தக் குழுவின் பரிந்துரைகளையும் பரிசீலித்து வல்லுநர் குழு அறிக்கை தரும்'' என்ற ஒரு புதிய அறிவிப்பையும் சேர்த்திருந்தது. இந்த அறிவிப்பு இதுவரையில் இல்லாமல் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள நிலையில், நமக்கு இதுகுறித்த சந்தேகம் எழுந்தது. நடைமுறையில் உள்ள புதிய ஓய்வூதியத் திட்டத்தை மேம்படுத்துவது என்றால், இந்த புதிய பென்சன் திட்டம் தொடரப் போகிறது என்பதான அர்த்தத்தை அந்த அறிவிப்பு கொண்டுள்ளதாகத் தோன்ற, ஈரோட்டில் முதல்வருடனான சந்திப்பின்போது ஜாக்டோ-ஜியோ அமைப்பினர் முதல்வரிடம் அது குறித்து கேட்டபோது, அதற்கு அவரால் உரிய விளக்கம் தரமுடியவில்லை. முதல்வருக்கு ஜால்ரா போட்ட சில தோழமைச் சங்க நிர்வாகிகள், அப்படி கேள்வி கேட்பது முதல்வரை சந்தேகிப்பதாக ஆகிவிடும், முதல்வர் நம்முடைய கோரிக்கைகளை தீர்த்து விடுவதாக நம்பிக்கை அளித்துள்ள நிலையில் அறிக்கையின் பேரில் சந்தேகம் கொள்ளக்கூடாது என்று நம்மை வசை பாடினார்கள்.

அப்படி, முதல்வர் நம்முடைய கோரிக்கைகளை கண்டிப்பாக தீர்த்து வைப்பார் என்று ‘கிராப்’ போட்டு பேசியவர்கள், ஜாக்டோ-ஜியோ போராட்டம் நீதி மன்றத்தால் தடை செய்யப்பட்டபோது நம்மைப் பார்த்து ஏளனச் சிரிப்பு சிரித்தார்கள். அதன்பிறகு நீதிமன்ற உத்தரவு 13.10.2017க்குள் தமிழக அரசு ஊதிய மாற்றம் குறித்து அறிவிப்பு வெளியிட வேண்டும் என்று உத்தரவிட்ட பின்னர் இருந்த இடத்திலிருந்த காணாமல் போனார்கள். 11.10.2017ஆம் தேதி ஊதிய மாற்றம் குறித்த அறிவிப்பு வந்த பின்னரும், அதன்பிறகு 21 மாத சம்பள வித்தியாச நிலுவையை அரசு வழங்க முடியாது என்று கூறியபோதும் இந்த ஜால்ரா தலைவர்கள், கோரிக்கையை நிறைவேற்றுவதாக உறுதி கூறி ஏமாற்றிய முதல்வரை கண்டித்தோ, நிலுவைத் தொகையை தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டோ பேச்சோ, பேட்டியோ, அறிக்கையோ, அறிவிப்போ கொடுக்கவில்லை. முதல்வரின் வீட்டில் போய் காத்துக்கிடந்து கோரிக்கையை வலியுறுத்தவும் இல்லை. இந்த லெட்டர்பேடு தலைவர்கள், அரசுக் காவடிகள் இப்போது வந்திருக்கும் ஊதிய மாற்றத்திற்காக தமிழக முதல்வருக்கு நன்றி அறிவிப்பு விழா ஏதேனும் எடுத்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

ஒன்றுபட்டு போராடி உரிமைகளை கண்டிப்பாக வெல்லலாம் என்ற நிலைமை கனிந்து வந்த வேளையில் இதுபோன்ற சிலர் தட்டி விட்டதாலேயே, புதிய பென்சன் திட்டத்தை நீக்க எடுக்கப்பட்ட முனைப்பான நடவடிக்கைகள் முனை மழுங்கிப் போயின. அதன் காரணமாகவே இன்று வரை நாம் பழைய ஓய்வூதிய

திட்டத்தை தொடர்வதற்கான உத்தரவுகளை அரசிடமிருந்து பெறுவதில் தாமதங்களை சுமக்க வேண்டிய நிலை எழுந்து இன்று வல்லுநர் குழு ஏழாவது முறையாக நீட்டிப்பு செய்யப்படும் நிலை எழுந்துள்ளது.

ஊதிய மாற்ற வழக்கு நீதிமன்றத்தில் அடுத்த வாய்தாவில் வரும் போது பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அறிக்கை வெளியிடவேண்டிய டாக்டர் டி.எஸ். ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) குழு 30.11.2017 வரை அறிக்கையை தாக்கல் செய்யாதது குறித்து நீதிமன்றத்தில் முறையிட்டு உரிய உடனடி பரிகாரம் கிடைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு. வழக்கு விசாரணைக்கு வரும்போது அரசின் வஞ்சம் இன்னும் மாறவில்லை என்பதனையும், அரசு நமக்கு மீண்டும் இழைத்துள்ள அநீதிகளை நீதியரசர்கள் முன் தெரிவித்து நமது இழப்பையும், உரிமைகளையும் மீட்டெடுப்போம். நீதிமன்ற நடவடிக்கையின் மூலம் பெற முடியாமல் போய்விட்டால் மீண்டும் போராடிப் பெறுவதற்கு தயாராவோம்.

நீதிமன்ற வாய்தாவிற்குப் பின்னர் இதுகுறித்த போராட்ட அறிவிப்பு ஏதேனும் வெளிவந்தால் ஒவ்வொரு அரசு அலுவலகத்திலும் உள்ள அரசு ஊழியர்கள், அதிலும் குறிப்பாக புதிய ஓய்வூதிய திட்டத்தின் வரையரையில் உள்ள ஊழியர்கள், ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் போராட்ட முனைக்கு வந்து கோரிக்கை ஏற்கப்படும் வரை ஒன்றுபட்டு நின்றே ஆக வேண்டும். அப்போது தான் நம் முன்னே நடக்கும் அநீதிகளுக்கு நாம் முடிவு கட்ட முடியும்.

அரசின் கரங்கள் பிடித்து வைத்திருக்கும் நம் உரிமைகளை மீட்டெடுக்கும் வரை போராட்டக் களத்திலிருந்து திரும்ப மாட்டோம் என சபதமேற்போம்.

**தன் கண்முன்னே நடக்கும் அநீதிகளுக்கு எதிராக வெகுண்டெழுகிறானோ அவனே என் தோழன் - என்ற தோழர் சேகு-வேராவின் வார்த்தைகளை உண்மையாக்கி காட்டுவோம். உரிமைகளை மீட்டெடுக்க கரம் நீட்டுவோம்.**

■

# நீதிபதிகளின் தீர்ப்பு குறித்து நீதிபதிகள் கருத்து



*தலைமை நீதிபதி, செவிலியர்கள் ரூ.7700 மாத சம்பளம் குறைவு என்று கருதினால் வேலையை ராஜினாமா செய்துவிட்டு செல்லுங்கள் என்று உரிய சம்பளம் கேட்டு அமைதியான முறையில் போராடும் செவிலியர்களுக்கு கூறியது அதிகப்படியானது, நியாயமற்றது மற்றும் தவறானது. இப்படி கூறியது மன வேதனையை அளிக்கிறது.*

*செவிலியர்கள் sanctioned post-களில் நியமனம் செய்யப்பட்டவர்கள். இவர்களுடன் நியமிக்கப்பட்ட மருத்துவர்களுக்கும், மருந்தாளுனர்களுக்கும், ஆய்வுக்கூட உதவியாளர்களுக்கும் உரிய கால ஏற்ற முறை (scale of pay) ஊதியம் வழங்கும் அரசு, செவிலியர்களுக்கு மட்டும் அத்துக்கூலியாக (consolidated pay) ரூ.7700 கொடுக்கிறது.*

*நீதிபதிகள் வீட்டில் பணிபுரியும் தற்காலிக தினக்கூலி அலுவலக ஊழியர்களுக்குக்கூட மாதம் ரூபாய் பத்தாயிரம் அளிக்கப்படுகிறது. அவர்கள் திறன் அற்ற (unskilled) பணியாளர்கள். அவர்களுக்கு கல்வி தகுதி தேவையில்லை. நான் நீதிபதியாக பணிபுரிந்தபோது, sanctioned post-ல் பணிசெய்யும் உயர்நீதிமன்ற அலுவலக ஊழியர்களுக்கும் கல்வி தகுதி தேவை இல்லை. இவர்களுக்கு 01.01.2016ல் திருத்தி அளிக்கப்படும் ஊதியத்தில் புதியதாக சேருபவருக்கே சுமார் ரூ.20,000 மாத சம்பளம் கிடைக்கும்.*

*கட்டிட வேலை செய்யும் கல் சுமக்கும் சித்தாளுக்குக்கூட தினக்கூலி ரூ.600 முதல் ரூ.700 வரை. செவிலியர்கள் +2 முடித்த பின் 4 ஆண்டுகள் செவிலியர் தகுதி பெற படிக்கின்றனர். அவர்கள் பணி, திறன் பணி (skilled) எப்படி இருப்பினும், சம்பளம் குறைவு என்று கருதினால் வேலையை ராஜினாமா செய்துவிட்டு செல் என்பது நியாயமற்றது.*

***நீதியரசர் ஹரிபரந்தாமன் (ஓய்வு)***



*அத்தியாவசிய சேவை என்றால் செவிலியர் களை ஏன் அத்தக்கூலியில் வைத்திருக் கிறார்கள்?*

***நீதியரசர் கே.சந்துரு (ஓய்வு)***

# AISGEF தேசிய செயற்குழு கூட்ட முடிவுகள்

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய செயற்குழு கூட்டம் புது தில்லியில் 10.11.2017 அன்று நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

### தேசிய ஓய்வூதிய திட்டம்

அ) மாநிலங்களில் அமல்படுத்தப்பட்டுள்ள தேசிய ஓய்வூதிய திட்ட அமலாக்கம் குறித்து நமது சம்மேளனத்தில் உள்ள இணைப்பு சங்கங்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வாயிலாக விவரங்கள் பெற்று 2017 டிசம்பர் 31க்குள் சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டும்.

ஆ) இந்திய நடுவணரசு வழிகாட்டுதல்படி, தேசிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணியாற்றும் ஊழியர்களுக்கு பணிக்கொடை இதுவரை வழங்கப்படவில்லை எனில், சம்பந்தப்பட்ட மாநில முதல்வர்களுக்கு கோரிக்கை அளித்து முறையிட வேண்டும்.

இ) தேசிய ஓய்வூதிய திட்டத்தின்கீழ் கொண்டவரப்பட்டுள்ள ஊழியர்களுக்கென தனியான அமைப்பு ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை என முடிவாற்றப்பட்டது.

### ஒப்பந்த நியமனம்

அ) பி.ஜே.பி. தலைமையிலான ஹரியானா மாநில அரசு சம வேலைக்கு சம ஊதியம் என்ற ஆணையினை வெளியிட்டு அகவிலைப் படியினை மறுத்துள்ளது. இதனை அம்பலப்படுத்த வேண்டியுள்ளது.

ஆ) குஜராத் தேர்தலில், சில கட்சிகளின் தேர்தல் அறிக்கையில், ஒப்பந்த ஊழியர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது

இ) பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை வழங்கிடுவதற்ககாகவே ஜம்மு-காஷ்மீர் அரசு தனித்த கழகம் ஒன்றினை தோற்றுவித்துள்ளது.

### தேசிய ஓய்வூதியம் மற்றும் ஒப்பந்த பணி நியமனங்களுக்கெதிராக கூட்டுப் போராட்டங்கள்

தேசிய ஓய்வூதியம் மற்றும் ஒப்பந்த பணி நியமனங்களுக்கு எதிராக மாநில அளவிலான கருத்தரங்கங்களை பிற அமைப்புகளுடன் ஒன்றிணைந்து 2017 டிசம்பர் 31க்குள் முடித்திடுவது என முடிவாற்றப்பட்டது. அகில இந்திய நிர்வாகிகள் பங்கேற்பார்கள்.

அதேபோல, பிற அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து மாவட்ட அளவிலான கருத்தரங்கங்கள் 31 ஜனவரி 2018க்குள் நடத்தி முடிப்பது எனவும் இக்கருத்தரங்கங்களில் மாநில அளவிலான தலைவர்கள் பங்கேற்பார்கள் எனவும் முடிவாற்றப்பட்டது.

இப்பொருள் குறித்த கையெழுத்து இயக்கம் 2018 பிப்ரவரி முதல் வ்ாரத்தில் துவங்கி மார்ச் 15க்குள் முடித்து இந்திய பிரதமருக்கு அனுப்பிடும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பு 2018 மார்ச் 27 அன்று அனைத்து மாவட்டங்களிலும் பெருந்திரளான ஊழியர்களை உள்ளடக்கிய பேரணி / தர்ணா போன்ற இயக்கங்கள் நடத்தி தீர்மானங்கள் நிறைவேற்றி மாவட்ட ஆட்சியர் மூலம் அனுப்பிடுவது எனவும் முடிவாற்றப்பட்டது.

தேசிய ஓய்வூதியத் திட்டம் குறித்து ஒரு விளக்கக் குறிப்பு தயாரித்து அதனை மத்திய, மாநில அரசு ஊழியர் அமைப்புகளின் தலைவர்கள் கூட்டாக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கிடவும் இந்திய பிரதமர் மற்றும் நிதிஅமைச்சருக்கு கோரிக்கை சாசனம் அளிப்பது எனவும் முடிவாற்றப்பட்டது.

### AISGEF 16ஆம் தேசிய மாநாடு

AISGEF 16ஆம் தேசிய மாநாடு தமிழ்நாடு, சென்னையில் 2018 ஏப்ரல் 5 முதல் 8ம் நாள் வரை நடைபெறும். இம்மாநாட்டினை நடத்திடும் பொறுப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தைச் சாரும். இம்மாநாட்டில் பங்கேற்கும் பிரதிநிதி ஒருவருக்கு பிரதிநிதி கட்டணமாக ரூ.1000/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மாநாட்டில் பங்கேற்கும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இம்மாநாட்டில் பார்வையாளர்களாக எவருக்கும் அனுமதிக்கப்பட மாட்டாது.

### புதுதில்லியில் AISGEFக்கான அலுவகை கட்டிடம் கட்டுதல்

புதுதில்லியில் கட்ட தீர்மானித்திருக்கும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மமேளனத்திற்கான அலுவலக கட்டிடத்திற்கு ரூ.3.5 கோடி என செலவு மதிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து இணைப்பு சங்கங்களும் உறுப்பினர் ஒருவருக்கு ரூ.20/- என்ற விகிதத்தில் தங்களது பங்களிப்பினை அடுத்து வரும் தேசிய செயற்குழுவிற்கு முன்னதாக

தலைமை அலுவலகத்தில் செலுத்திட வேண்டுமெனவும், முதல் தவணையினை 2017 டிசம்பர் 31க்குள் செலுத்துமாறு அனைத்து இணைப்பு சங்கங்களையும் கேட்டுக்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டிற்கான இலக்கு ரூ.25 லட்சம் ஆகும். முதல் தவணை ரூ.10 லட்சம்.

## எம்ப்ளாயீஸ் ஃபோரம் மாத இதழ் சந்தா

Employees Forum இதழுக்கான சந்தா எண்ணிக்கையினை அனைத்து மாநிலங்களிலும் உடனடியாக உயர்த்திட வேண்டுமெனவும் 2018 ஜனவரி 31க்குள் சந்தா சேகரித்து அனுப்பிட வேண்டுமெனவும், பத்திரிக்கைக்கான கட்டுரைகள், மாநில நிகழ்வுகள் புகைப்படங்கள் ஆகியவற்றை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்திடுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. தமிழகத்திற்கு இலக்காக 5000 சந்தாக்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (சந்தா தொகை ஆண்டுக்கு ரூ.60/-)

## ஊதிய மாற்றம்

இன்னும் சில மாநிலங்களில் அரசு ஊழியர்களுக்கு ஊதிய திருத்தம் செய்யப்படவில்லை. இது குறித்து மாநில அமைப்புகள் தொடர்ச்சியான, வலுவான போராட்டத்திற்கு செல்ல வேண்டுமென வழிகாட்டப்பட்டது.

## அனைத்து மாநில ஊழியர்களுக்கான ஓய்வூதிய சம்மேளனம்

அனைத்து மாநிலங்களிலும் உள்ள மாநில அரசு ஓய்வூதியர்களுக்கென அகில இந்திய சம்மேளனம் அமைப்பது என முடிவாற்றப்பட்டது. இதற்கென தோழர்.மஞ்சுள்குமார் தாஸ் (கன்வீனர்) தலைமையில் தோழர்கள் அசோக் தூால் (நாக்பூர்), வேத்பிரகாஷ் சர்மா (பஞ்சாப்) மற்றும் மனோஜ் காந்த் குஹா ஆகியோரைக் கொண்ட துணைக்குழு அமைக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் முடிவாற்றப்பட்டது.

## சம்மேளனத்தின் அமைப்பு விதிகள்

தோழர் இரா.முத்துசுந்தரம் (சேர்மன்) மறைவின் காரணமாக காலியாகவுள்ள சம்மேளனத்தின் அமைப்பு விதி குழுவிற்கு ஒருங்கிணைப்பாளராக திரு.ஹிமான்சூ சர்க்கார் (கொல்கத்தா அலுவலக செயலாளர்) செயல்படுவார். சம்மேளனத்தின் அமைப்பு விதிகள் குறித்த முன்மொழிவுகளை 2018 ஜனவரி 31க்குள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்திடுமாறு அனைத்து இணைப்பு சங்கங்களையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## மணிப்பூர் மாநில அரசு ஊழியர் சங்கத் தலைவர்கள் கைது

ஊதிய மாற்றத்திற்காக போராடிய மணிப்பூர் மாநில அரசு ஊழியர் சங்கத் தலைவர்கள் தோழர் இந்துபாலா தேவி உள்ளிட்ட நான்கு தோழர்களை அம்மாநில அரசு கைது செய்துள்ளதை இச்செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. இத்தோழர்களை உடனடியாக விடுவிக்க வேண்டுமெனவும் ஊதிய மாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கு சுமூக தீர்வினை எட்டுமாறும் மணிப்பூர் மாநில அரசை கேட்டுக் கொள்கிறது.

AISGEF-க்கென புதிய வாட்ஸ்அப் குரூப்பினை ஏற்படுத்திடுவது எனவும், இதற்கான பணியினை தலைமையிடத்திலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செயல்படுத்திடுவது எனவும் முடிவாற்றப்பட்டது.

## சம்மேளனத்தின் வங்கிக் கணக்கு

இனி வருங்காலங்களில் சம்மேளனத்திற்காக செலுத்தப்படும் தொகை பணமாக இல்லாமல் அனைத்து இணைப்பு சங்கங்கள் காசோலையாக மட்டுமே செலுத்த வேண்டுமெனவும், காசோலைகள் General Secretary, All India State Government Employees Federation அல்லது Employees Forum Monthly என்ற பெயர்களில் (நிகழ்விற்கு தக்கவாறு) அனுப்பப்படல் வேண்டுமெனவும் முடிவாற்றப்பட்டது.

## மாநில அறிக்கை

அடுத்த தேசிய செயற்குழு கூட்டத்திலிருந்து அனைத்து இணைப்பு சங்கங்களும் தங்களது மாநில நிகழ்வுகளை சுருக்கமான எழுத்துப்பூர்வ அறிக்கையாக தயாரித்து அனைத்து தேசிய செயற்குழு உறுப்பினர்களுக்கும் வழங்கிடுவதை உத்திரவாதப்படுத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

## அடுத்த தேசிய செயற்குழு கூட்டம்

அடுத்த தேசிய செயற்குழு கூட்டம் ஹரியானா மாநிலத்தில் உள்ள பரிதாபாத் நகரில் 2018 பிரப்ரவரி 18ம் நாள் ஹரியானா சர்வ கர்மச்சாரி மகா சங் கட்டிடத்தில் காலை 9.30மணிக்கு நடைபெறும்.

சம்மேளனத்தின் தேசிய செயற்குழுவில் மகாராஷ்ட்ரா மாநில திரு.யோகிராஜ் கோண்டே மறைந்ததினால் ஏற்பட்டுள்ள காலியிடத்திற்கு அம்மாநில ஊழியர் கூட்டமைப்பு தலைவர் தோழர் விஸ்வாஸ் பி கட்டார் தேசிய செயற்குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

■

**அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16வது தேசிய மாநாடு, 2018 ஏப்ரல் 5-8 சென்னை**

# நம்மை எதிர்நோக்கியுள்ள சவால்களும்! நாம் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகளும்!

அன்பிற்கினிய தோழர்களே!

அகில இந்திய அரசு மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பதினாறாவது அகில இந்திய மாநாடு சென்னையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தலைவராக இருந்த, அரசு ஊழியர் இயக்கத்தின் இரண்டாவது ஆசானாக விளங்கிய, காலஞ்சென்ற அருமைத் தோழர் இரா.முத்து சுந்தரம் (ஆர்.எம்.எஸ்.) அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சென்னையில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் மாநாட்டை நடத்திட வேண்டும் என எண்ணம் கொண்டிருந்தார். ஆனால் தோழரின் உடல்நிலை காரணமாக, உடல்நிலையில் முன்னேற்றம் கண்டவுடன் சென்னையில் மாநாட்டை நடத்தலாம் என எண்ணியிருந்தார். ஆனால் காலம் இப்போது அவரை நம் கைகளிலிருந்து பறித்துக்கொண்ட நிலையில், அவர் எண்ணிய எண்ணங்களை, லட்சியங்களை செயல்படுத்துவதன் மூலமாக, நமது இயக்க முன்னோடிகள் காண்பித்துக் கொடுத்த பாதைவழியே நம் பயணத்தை தொடர்கின்ற உற்சாகமும், உத்வேகமும் நமக்கு ஏற்படும் என்பதும், இத்தகைய உற்சாகமும், உத்வேகமும் இந்த இயக்கத்தை மேலும் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்ல உதவும் என்றும் திடமாக நம்புகிறோம்.

தமிழ்நாட்டில் உள்ள அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக தமிழ்நாடு அரசு ஊழியர் இயக்கம் செயல்படுவதுபோல், ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கும் ஊழியர் சங்கங்கள் ஒன்றிணைந்து இந்தியா முழுமைக்குமான அரசு ஊழியர்களுக்கான ஒரு அமைப்பாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் இயங்கி வருகிறது. இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு பிரிட்டிஷ் அரசில் நியமிக்கப்பட்ட குமாஸ்தாக்களும், அதிகாரிகளும் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்ட போதிலும் அவர்கள் ஏற்கெனவே பிரிட்டிஷ் அரசாங்கத்தில், பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் இயந்திரங்களாக கருதப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்ட போக்கு சுதந்திர இந்தியாவிலும் மாறவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் அதன் குமாஸ்தாக்கள் மீது விதித்திருந்த கட்டுப்பாடுகள், தடை உத்தரவுகள், எழுத்துரிமை, பேச்சுரிமை போன்றவைகள் சுதந்திரத்திற்குப் பிறகும் தொடர்கின்றன.

சுதந்திர இந்தியாவின் ஆட்சியாளர்களும், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் ஏதேச்சதிகார கோட்பாடுகளை விட்டொழிக்காமல் அதை அரசு ஊழியர்கள் மீது பாய்ச்சி அவர்களை அடிமைகளாகவே வைத்திருக்க வேண்டும் என்று எண்ணினார்கள். அதனால் அரசு ஊழியர்களின் உரிமைகளிலும் ஊதியங்களிலும் கட்டுப்பாடுகளையும் வெட்டுப்பாடுகளையும் விதித்தார்கள். பிரிட்டிஷ் கால ஆட்சியில் அரசு ஊழியர்கள் நடத்தப்பட்டதை விட சுதந்திர இந்தியாவில் அரசு ஊழியர்கள் மோசமாக நடத்தப்படும் சூழ்நிலை உருவானது. அரசியல் தொற்று அரசு ஊழியர்களுக்கு பரவி, ஆபத்தை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் கவனமாகயிருந்த இந்திய அரசு அதற்காக 'அரசு ஊழியர்கள் நடத்தை விதிகளை' உருவாக்கியது. இதன்மூலம் அரசு ஊழியர்களும் அவர்தம் குடும்பத்தினரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அரசியல் கட்சி சார்புடன் இருக்கக்கூடாது என அச்சுறுத்தி அரசு ஊழியர்களை அரசியலிலிருந்து ஒதுக்கி வைக்க முயற்சித்தது. அத்தகைய சூழ்நிலையில், ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளை எதிர்க்கவும், இருக்கும் உரிமைகளைக் காக்கவும், புதிய உரிமைகளைக் கேட்கவும், இந்தியா முழுமைக்குமான ஒரு அமைப்பு அரசு ஊழியர்களுக்காக ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. இந்தக் கருத்து வலுப்பெற்று, சுதந்திர இந்தியாவின் பதின்மூன்றாண்டு கால அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலையின் பின்னணியில் 1960ம் ஆண்டு ஜனவரியில் **அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம்** தோற்றுவிக்கப்பட்டது.

கடந்த 57 ஆண்டுகளாக இந்தியாவில் அரசு அலுவலகங்களில் பணியாற்றிய மற்றும் பணியாற்றும் அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக மட்டுமில்லாமல் பிற துறை சார்ந்த தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், கட்டுமான ஊழியர்கள் போன்ற பலதரப்பட்ட உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைக்காகவும் இது குரல் கொடுத்து வருவதன் மூலம் இந்தியாவில் உள்ள மிகப்பெரிய தொழிற்சங்கங்களுக்கு இணையாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் உயர்ந்து நிற்கிறது.

இந்தியா முழுவதிலும் உள்ள அரசு ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது, பிரச்சினைகளைத் தீர்த்து

வைப்பது, பொருளாதார மேம்பாட்டிற்காக உழைப்பது, சமூகப் பாதுகாப்பிற்காக பாடுபடுவது மற்றும் சுரண்டலற்ற சமுதாயத்தை உருவாக்க போராடுவது போன்ற உயரிய நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட இச்சம்மேளனம் கடந்த 57 ஆண்டுகளாக அந்த நோக்கங்களுக்காக போராடி வருகிறது.

1990ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு பின்பற்றி வரும் புதிய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மிகுந்த பாதிப்புகளுக்கு ஆளாகி வருகின்றனர். அனால் அரசோ உள்நாட்டு, வெளிநாட்டு பெருநிறுவனங்களின் நலன்களுக்கு ஆதரவாக செயல்படுகிறது. தேவையான அளவு சாலைகள் அமைத்தல், ரயில்பாதைகள் அமைத்தல், மின்சார உற்பத்தி, நீர்ப்பாசன வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த இந்த பெருநிறுவனங்கள் முன் வருவதில்லை. ஆனால், அவற்றுக்கு மத்திய, மாநில அரசுகள் காட்டும் சலுகைகள் நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்துகின்றன. உற்பத்தித் துறையில் தேக்கம், யூக வணிகம், ரியல் எஸ்டேட் வணிகம் போன்றவை அரசின் ஆசியுடன் பீடுநடை போடுகின்றன.

அரசு ஊழியர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது, அரசியல்கட்சி சார்புடன் செயல்படக்கூடாது என்றெல்லாம் விதிகளை வகுப்பதால் மட்டும், அரசு எதைச் செய்தாலும் அதை அரசு ஊழியர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதையும், அரசு ஊழியர்களும் மக்களில் ஒருபகுதியினரே என்பதையும் நாட்டில் நடக்கும் நல்லது கெட்டதுகள் பற்றி உரைக்கவும், அவற்றுக்காக போராடவும் அவர்களுக்கு உரிமை உண்டு என்பதையும் கடந்த 57 ஆண்டுகளாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் பலவிதமான போராட்டங்கள் மூலம் இந்திய அரசாங்கத்திற்கு உணர்த்தி வந்துள்ளது. இதன் ஒவ்வொரு மாநாட்டிலும் அந்தந்த காலத்தின் அரசியல் நிலவரங்களும் அதனால் அரசு ஊழியர்களுக்கு ஏற்படும் நன்மைகளும் தீமைகளும், நாட்டின் பாதுகாப்பு, உலகப் பொருளாதாரம், மற்ற உலக நாடுகளுடனான ஒப்பீடு போன்றவைகளும் இம்மாநாடுகளில் அலசப்பட்டு, இந்தியா முழுவதிலும் உள்ள அரசு ஊழியர்களின் தேவைகள் தொகுப்பட்டு, அவை தீர்மானங்களாக வடிக்கப்பட்டு, அரசிடம் பிரதிநிதித்துவமாகவோ, போராட்ட வடிவமாகவோ உருப்பெறும்.

இந்த மாநாட்டில் 2014ஆம் ஆண்டில் பாரதிய ஜனதா ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் நடைபெற்றுள்ள மாற்றங்களும், அரசு ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மை தீமைகளும், எதிர்கொள்ள வேண்டிய சவால்களும் எதிர்கால நடவடிக்கைகளும் அலசப்படவுள்ளது.

2014ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் பிரசாரத்தில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் மூன்றுவிதமான முழக்கங்கள் முன் வைக்கப்பட்டன. (1) (அச்சே தின்) இனி நல்லகாலம் பிறக்கும். (2) நாட்டின் பாதுகாப்புக்கு வலுவான கொள்கை உருவாக்கப்படும் (3 ) ஊழலுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இனி நல்லகாலம் பிறக்கும் என்ற பிரச்சாரத்தை மக்கள் ரசித்ததோடு மட்டுமல்லாமல் நம்பவும் செய்தனர். நம்புவதற்கு முக்கிய காரணம், ஊழலில் சம்பாதித்த கோடிக்கணக்கான ரூபாய்கள் வெளிநாட்டில் பதுக்கப்பட்டிருந்தாலும் அவற்றைக் கண்டுபிடித்து இந்தியா கொண்டு வந்து ஒவ்வொருவருடைய கணக்கிலும் ரூ.15 லட்சம் போடப்படும் என்றும் உறுதி அளிக்கப்பட்டதுதான். இந்த நம்பிக்கையை இன்னும் உறுதிபடுத்தும் அளவிற்கு பிரச்சாரத்தில் இன்னும் வலு சேர்க்கப்பட்டது. ''ஊழல் செய்தவர்கள் எவ்வளவு செல்வாக்கானவர்களாக இருந்தாலும் அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்'' என்றது பிரச்சாரம்.

ஆனால் பாஜக பதவிக்கு வந்ததும் இதில் ஆர்வம் இழந்தது. நூறு நாட்களில் ஊழலை ஒழிப்போம் என்ற தேர்தல் வாக்குறுதி என்னவானது என்று மக்களும் எதிர்க் கட்சியினரும் திரும்பத் திரும்பக் கேட்டு அலுத்துப் போனதுதான் மிச்சம். பாஜக அரசு பதவிக்கு வந்து 42 மாதங்கள் முடிந்துள்ள நிலையில் ஊழல் ஒழிப்பில் மிகப்பெரிய முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை என்பது தான் நிதர்சனமாகியுள்ளது.

ஊழல் ஒழிப்பில் பாஜக அரசின் கையாலாகாத்தனம், வங்கிகளில் கடன் வாங்கிவிட்டு திருப்பிச் செலுத்தாத தொழிலதிபர் விஜய் மல்லையா பிரிட்டனுக்கு தப்பிச் சென்றதன் மூலமாகவும், அவரை கைது செய்துமீட்டு வர முடியாததன் மூலமாகவும் வெட்டவெளிச்சமாகியுள்ளது. அதேசமயம் விவசாயத்திற்காக டிராக்டர் வண்டி வாங்கிய விவசாயி அதற்கான கடன் தவணையை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில், பணம் கேட்டு அவரை வங்கி அதிகாரிகள் நையப் புடைக்கும் காட்சிகள் ஏமாற்றுபவர்களை விட்டுவிட்டு, இயலாதவர்களிடம் இந்த அரசு காட்டும் பாரபட்சத்தை மக்களுக்கு படம் போட்டு காட்டியிருக்கிறது.

'மேக் இன் இந்தியா' திட்டத்தின்கீழ் இந்தியாவில் தொழில் தொடங்க வாருங்கள் என வெளிநாடுகளில் தொடர்ந்து முழக்கமிட்டு வருகிறார் நமது பிரதமர். ஆனால் 'மேக்இன் இந்தியா' திட்டத்தின் மூலம் இதுவரை இந்தியாவிற்கு வந்த முதலீடுகள் குறித்து அரசு எந்த ஒரு அறிவிப்பையும் வெளியிடவில்லை.

பிரதமர் மோடி பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டதன் விளைவாக இந்தியாவில் அந்நிய முதலீடு 27 சதவீதம் அதிகரித்து 3093 கோடி டாலராக உயர்ந்துள்ளதாக மாநிலங்களவையில் எழுத்துபூர்வமான பதிலில் மத்திய வர்த்தகத் துறை அமைச்சராக இருந்த நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார். ஆனால் மோடி பதவி ஏற்றதுமே பல துறைகளில் அந்நிய முதலீட்டு விதிகள் தளர்த்தப்பட்டதுதான் அந்நிய நேரடி முதலீடு உயர்வதற்கு முக்கிய காரணம் என்றும், மோடியின் வெளிநாட்டு பயணத்தால் மிகக்குறைந்த அளவே அந்நிய நேரடி முதலீடு உயர்ந்துள்ளது என்றும் பத்திரிகைகள் பட்டியலிடுகின்றன.

அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்ற பிறகு 7 நாடுகளுக்கு விசா தடை, எச்1பி விசாவில் மாற்றம் என பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார். இந்தியாவைப் பொறுத்தவரை எச்1பி விசா மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தப் பிரச்னையால் இன்போசிஸ், டிசிஎஸ் என முக்கிய ஐடி நிறுவனங்கள் அமெரிக்காவில் உள்ள இந்திய ஊழியர்களை வேலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக நீக்கி வருகின்றன. இன்போசிஸ் நிறுவனம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 10,000 அமெரிக்க ஊழியர்களை பணிக்கு எடுக்கப் போவதாக கூறியிருந்தது. இந்தியாவில் மிக முக்கியத் துறையான தகவல் தொழில்நுட்பத் துறையில் பிரச்னை நீடித்து வந்த நிலையில் பிரதமர் மோடியின் அமெரிக்கப் பயணத்தை பல்வேறு நிபுணர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்தனர். ஆனால் சுமார் 3 மணி நேரம் வரை நடைபெற்ற சந்திப்பில் பிரதமர் மோடி எச்1பி விசா குறித்து டிரம்பிடம் பேசவில்லை. சர்வதேச ஊடகவியலார்கள் இதை ராஜ்ஜியத் தோல்வி என்றே வர்ணிக்கிறார்கள்.

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை புதிய பென்சன் திட்டம் (இந்திய அளவில் நேஷனல் பென்சன் திட்டம் (NPS) என்றழைக்கப்படுகிறது) திரும்பப் பெறப்பட்டு பழைய பென்சன் திட்டமே தொடரவேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வருகின்றன. மேலும் மத்திய அரசின் 7வது ஊதிய மாற்றத்தில் பல்வேறு (Allowances) படிகள் மறுக்கப்பட்டுள்ளன. சில (Allowances) படிகள் குறைக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் வழங்கக் கேட்டு அகில இந்திய அளவில் போராட்டம் நடத்துவது குறித்து தீர்மானிக்க வேண்டியுள்ளது. மேலும் ஆட்குறைப்பு, அவுட்சோர்சிங் முறையில் ஆட்களை நியமனம் செய்தல், காலிப் பணியிடங்களை நிரப்பாமல் விட்டுவிடுதல் போன்ற நடவடிக்கைகளும் தொடர்ந்து மத்திய மாநில அரசுகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பன்னாட்டு உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (IFPRI) வெளியிட்டுள்ள உலக வறுமைக் குறியீடு 2017 பட்டியலில் பட்டியலியடப்பட்டுள்ள 119 நாடுகளில் இந்தியா 100 வது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவிற்கு கீழே உள்ள இரண்டு ஆசிய நாடுகள் பாகிஸ்தானும், ஆப்கானிஸ்தானும் மட்டும்தான். சர்வதேச நிதி நிறுவனம் (IMF) சமீபத்தில் 'உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம்' இதழில் இந்தியாவின் வளர்ச்சி குறைந்துள்ளது என்றும் அதற்குக் காரணம் பண மதிப்பிழப்பு நடவடிக்கையும், ஜிஎஸ்டி வரிவிதிப்பில் நிலவும் குழப்ப நிலையும் தான் என்று குறிப்பிட்டுள்ளது.

இதேபோல, கறுப்புப் பணத்தை பெருமளவுக்கு வெளியே கொண்டு வருகிறேன் என்று சொல்லி 1000 மற்றும் 500 ரூபாய் நோட்டுக்களின் பணமதிப்புகளை அதிரடியாக நீக்கி கிராமப்புற பொருளாதாரத்தையும், அமைப்புசாரா தொழில்களையும் சீர்குலைத்து ஏராளமான மக்களின் வேலை வாய்ப்பையும், பொருளாதார நிலையையும் பறித்ததுதான் பாஜக அரசின் பண மதிப்பிழப்பு நடவடிக்கையால் ஏற்பட்ட லாபம். ஏழைகளும், நடுத்தர மக்களும் படிப்பறிவில்லாதவர்களும் இந்த அறிவிப்பினால் சொல்லொணா இன்னல்களுக்கு ஆளானதும், பழைய நோட்டுக்களை புது நோட்டுக்களாக மாற்ற நாள் முழுதும் கால்கடுக்க வங்கி வாசல்களில் காத்திருந்து சிலர் அங்கேயே இறந்துபோனதும் தான் மிச்சம்.

2014 தேர்தலில் வென்ற பிறகு பிரதமராக பொறுப்பேற்ற மோடி உடனடியாக உலகம் சுற்ற புறப்பட்டு விட்டார். கடந்த மூன்றாண்டுகளில் 64 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணச் செலவு மட்டும் 275 கோடி ரூபாய். மன்மோகன்சிங் 2009ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் 36முறை மட்டுமே வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தார். மோடியின் வெளிநாட்டு பயணம் ராஜீய ரீதியிலான உறவுகளைத் தவிர்த்து வேறு எந்தப் பலனையும் இந்தியாவுக்கு ஏற்படுத்தித் தரவில்லை.

சற்று உற்று நோக்கினால் கடந்த மூன்றரை ஆண்டுகளில் பாரதிய ஜனதா ஆட்சி எடுத்த எல்லா நடவடிக்கைகளிலும் கடுமையாக பாதிக்கப்பட்டது, அன்றாடங்காய்ச்சிகளும், விவசாயிகளும், தொழிலாளர்களும், அரசு ஊழியர்களும்தான். காஸ் சிலிண்டருக்கான மானியம் பெறுவதற்கு வங்கிக் கணக்கை இணைக்க கட்டாயப்படுத்தப்பட்டதிலிருந்து ஆதார் எண்ணை ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் அவசியம் என உரைத்து மக்களை அலைகழித்துக் கொண்டிருக்கிறது இவ்வரசு. படிக்காத, பாமர மக்கள் நிறைந்துள்ள இந்நாட்டில் டீ குடிக்கக்கூட வக்கில்லாதவனிடம் டிஜிட்டல் இந்தியா பற்றிய போதனைகள் எந்தவிதப்

பலனையும் ஏற்படுத்தப் போவதில்லை. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, காய்கறிகள் மீதான விலையேற்றம் மற்றும் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் நாள்தோறும நிர்ணயிக்கும் போக்கு போன்றவை இவ்வரசின் மீது மக்களுக்கு மிகுந்த வெறுப்பைத் தோற்றுவித்துள்ளன.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தலையில்லாத ஆட்சியின் தலைமையில் காலில்லா அமைச்சரவையின் களிநடனம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கல்வி, காவிரி, கலாச்சாரம், பொதுசேவை வரி, மீனவர் பிரச்னை, மாணவர் எதிர்காலம், வேலை வாய்ப்பு என அனைத்துத் துறைகளிலும் மாநிலத்தின் உரிமைகள் அனைத்தும் மத்திய அரசிடம் அடகு வைக்கப்பட்டு, நிர்வாகம் சீர்கெட்டு, எத்திசையில் பார்த்தாலும் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களுமாய் மக்கள் வீட்டைவிட்டு வெளியே வந்திருக்கிறார்கள். மத்திய அரசும் தனது கட்சி தமிழகத்தில் காலூன்ற ரேஷனைவிட, ரெய்டை நம்பி முழு அதிகாரத்தையும் முடக்கி விட்டிருக்கிறது.

மக்கள் நலன், மக்கள் பணி, விவசாயம், வறட்சி, தொழில் வளர்ச்சி, கல்வி போன்ற எல்லாத் துறையிலும் அரசின் கவனம் பூஜ்யமாகியிருக்கிறது. தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிய பிற நாட்டு நிறுவனங்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. கோடிக்கணக்கான பணத்தை மாமூலாக கொடுத்தால் தான் தொழில் தொடங்க அனுமதி கிடைக்கும் என்ற இழிநிலையால் புதிய தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் செய்ய முன் வராமல் வேறு மாநிலங்களை தேடிப் போய்கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் உள்ள லட்சக்கணக்கான இளைஞர்களின் வேலை வாய்ப்பு லட்சியங்கள் இதனால் சுக்குநூறாய் நொறுங்கிக் கொண்டிருக்கின்றன.

மக்கள் நலனில் அக்கறையில்லாத அரசு, பதவி ஒன்றையே பசை போட்டு ஒட்டியிருக்கும் ஆட்சி, செயல்பாடு இழந்த அரசாங்கம், மோடி அரசின் ஏஜெண்டாக மாறியிருக்கும் முதல்வர், ஊழல் குற்றச்சாட்டுக்கள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டு மக்களே வெட்கித் தலைகுனியும் அளவுக்கு மரியாதை இழந்திருக்கும் அமைச்சர்கள், மக்கள் நலனாவது மண்ணாங்கட்டியாவது மூன்றாண்டு கால ஆட்சியில் முடிந்த வரை பணம் சேர்ப்பதொன்றே லட்சியமாகக் கொண்டு தொகுதியையும், வாக்களித்த மக்களையும் மறந்துபோன எம்எல்ஏக்கள். இவற்றுக்கு இடையில்தான் அரசு ஊழியர்களாகிய நாம் நமது உரிமைக்கான போராட்டங்களை நடத்தி வருகிறோம்.

சென்ற ஊதிய மாற்றத்தின் போது அலுவலர் குழு, ஒருநபர் குழு, குறைதீர்க்கும் குழு என பலவிதமான குழுக்களை அமைத்து அரசு ஊழியர்களின் ஊதிய மாற்றத்தில் முரண்பாடுகளுக்கு மேல் முரண்பாடுகளை ஏற்படுத்தி அலைகழித்த அதிகார வர்க்கமும் அரசாங்கமும் நம்முடைய பலமான போராட்டங்களுக்குப் பின் நீதிமன்ற உத்தரவின் பேரில் எட்டாவது ஊதிய மாற்றத்தை, முரண்கள் எதையும் சரி செய்யாமல், பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்துதல், சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியத்தை வழங்குதல், தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்களை ஒழித்துக்கட்டுதல் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான படிகள் போன்ற கோரிக்கைகள் எதையும் பரிசீலிக்காமல் அறிவித்திருப்பதும், மேலும் 1.1.2016ம் தேதி முதல் வழங்கப்பட வேண்டிய 21 மாத நிலுவைத் தொகையை வழங்க மறுத்திருப்பதும் எல்லா அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் வெறுப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து, நீதிமன்றத்தில், சம்பந்தப்பட்ட வழக்கு பட்டியலிடப்படும்போது எடுத்துரைப்பதென்றும், நீதிமன்றம் தன் வானளாவிய அதிகாரத்தை அவமதிப்பு வழக்கின் எல்லையோடு சுருக்கிக்கொண்டால் அடுத்தகட்ட போராட்டங்களை முன்னெடுப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில்தான் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16வது தேசிய மாநாடு சென்னையில் 2018 ஏப்ரல் 5-8 தேதிகளில் நடைபெற உள்ளது. மேலே பரிமாறிக் கொண்ட செய்திகளைப் பொறுத்து நாம் ஆய்வு செய்து, மக்கள் விரோத, ஊழியர் விரோத மற்றும் தொழிலாளர் விரோத கொள்கைகளை அமலாக்கத் துடிக்கும் மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும், பறிக்கப்பட்டுள்ள, தடுக்கப்பட்டுள்ள, மறுக்கப்பட்டுள்ள அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் உரிமைகளுக்கான நீண்டகால போராட்டங்களைத் திட்டமிடவும் வேண்டியுள்ளது.

ஏனவே, அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் இந்த மாநாட்டுக்கு ஆதரவளித்து நம்முடைய கோரிக்கைகளை இந்திய அளவில் உள்ள அரசு ஊழியர் சங்கங்களின் கவனத்திற்கும், ஆட்சியாளர்கள் பார்வைக்கும் பரிசீலனைக்கும் கொண்டு சென்று அதன்மூலம் நம்முடைய லட்சியங்களும் உரிமைகளும் வெற்றிபெறச் செய்ய 2018 ஏப்ரல் 5 முதல் 8 வரை சென்னையில் நடைபெற உள்ள அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன மாநாட்டை சிறப்பாக நடத்திட உறுதி கொள்வோம்.

■

**ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் மீது காவல் துறையினர் பொய் வழக்குகள் போடுவதையும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதையும் உடனே நிறுத்திட நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு காவல் துறை தலைவர் மற்றும் உள்துறை செயலாளர் ஆகியோர்களுக்கு நமது சங்கத்தின் மூலம் வழங்கப்பட்ட கடிதம்**

நாள் : 21.11.2017

பெறுநர்

1. **காவல்துறை தலைவர்** அவர்கள்,
   தமிழ்நாடு அரசு,
   சென்னை - 600 004.

2. **உள்துறை செயலாளர்** அவர்கள்,
   தமிழ்நாடு அரசு,
   சென்னை - 600 009,

அய்யா, வணக்கம்.

பொருள் : அவதூறு பரப்புரை - ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு - நீதிபதிகளைப் பற்றி பொதுக்கூட்டங்களில், பொது இடங்களில் மற்றும் சமூக வலைத்தளங்களில் ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அவதூறு பரப்புரை மேற்கொண்டதாக பொய் வழக்குகள் பதிவு - ஜாக்டோ-ஜியோ அமைப்பினர் எவரும் அத்தகைய பரப்புரைகளை மேற்கொள்ளவில்லை - பொய் வழக்குகள் போடுவதையும், முதல் தகவல் அறிக்கைகள் பதிவதையும் உடனடியாக நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளக் கோருதல் - தொடர்பாக.

பார்வை : ஜாக்டோ-ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் சார்பில் அந்தந்த மாவட்ட தலைநகரங்களில் உள்ள காவல் நிலையங்களில் எழுதிக் கொடுத்துள்ள உறுதிமொழிக் கடிதம்.

***

ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு என்பது தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு அரசுத் துறைகளில் உள்ள ஊழியர் சங்கங்களும், பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் சங்கங்களும் ஒன்றிணைந்த பேரமைப்பாகும். அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை அரசு மறுக்கும்போது அதனை பெறுவதற்காகவும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பான கோரிக்கைகளை வெல்வதற்காகவும், இந்த கூட்டியக்கத்தில் உள்ள அனைவரும் ஒன்றுகூடி போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், தர்ணாக்கள், உண்ணாவிரதங்கள் போன்ற பல்வேறுவிதமான போராட்ட உத்திகளை மேற்கொண்டு வருகிறோம்.

ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய மாற்றத்தை தமிழக அரசு 1.1.2016 முதல் தாமதப்படுத்தி வந்ததன் காரணமாக, அதை பெறுவதற்காக பல்வேறு போராட்டங்களை நாங்கள் நடத்தினோம். போராட்டத்தின் உச்சகட்டமாக காலவரையற்ற வேலை நிறுத்தத்திலும் ஈடுபட்டோம். நாங்கள் போராடவும், வேலை நிறுத்தம் செய்யவும் உரிமை இல்லை என ஒரு தனிநபர் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்து, அவ்வழக்கில் உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. தடையைத் தாண்டியும் போராட்டம் தொடர்ந்ததால், அவதூறு வழக்கு தொடரப்பட்டு, அவ்வழக்கில் நாங்கள் ஆஜராகி எங்கள் தரப்பு நியாயங்களை நீதிமன்றத்தில் எடுத்து வைத்த பிறகு, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை நீதியரசர்கள் எங்கள் தரப்பு நியாயத்தை உணர்ந்து உடனடியாக ஊதிய மாற்றம் ஏற்படுத்த தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர். அதன் காரணமாக 11.10.2017 அன்று தமிழக அரசு ஊதிய மாற்றத்திற்கான அறிவிப்பினை வெளியிட்டது.

மேற்கண்ட உரிமைகளைப் பெறுவதற்காக நடைபெற்ற போராட்டங்களின்போதோ, உயர்நீதிமன்றம் எங்கள் போராட்டத்தில் தலையிட்டு தடையிட்டபோதோ, அவதூறு வழக்கு தொடர்ந்தபோதோ அதை நாங்கள் எங்கள் தரப்பு வழக்குரைஞர் மூலமாக சட்டப்படியாகவே எதிர்கொண்டோம். ஆனால் நீதிமன்ற தீர்ப்புகள் குறித்து எதிர்மறையாகவோ, நீதிபதிகள் குறித்து பொதுவாகவோ, தனிப்பட்ட முறையில் அவதூறாகவோ, தரக்குறைவாகவோ, பொது இடங்களிலோ, சங்கக் கூட்டங்களிலோ, சமூக வலைத்தளங்களிலோ எங்கள் கூட்டமைப்பினர் யாரும் எவ்வித அவதூறு பரப்புரையும் மேற்கொள்ளவில்லை என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறோம்.

பண்பட்ட, படித்த சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் ஒன்றிணைந்த இந்த பேரியக்கத்தில் உரிமைக்கான குரல்கள் மட்டுமே ஓங்கி ஒலித்ததே தவிர இழிவான பரப்புரையோ, அவதூறு பிரச்சாரமோ யாரைப் பற்றியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழிகாட்டியுள்ள எழுத்துரிமை, பேச்சுரிமை, கருத்துரிமையை மீறி எந்த தனிப்பட்ட நபர் மீதோ, நீதிமன்றங்கள் மீதோ நாங்களோ எங்கள் நிர்வாகிகளோ, உறுப்பினர்களோ தரம் தாழ்ந்து, அவதூறான பரப்புரை மேற்கொள்ளவில்லை என்பதையும்,

அதுபோன்ற நடவடிக்கைகளில் எப்போதும் ஈடுபட்டதில்லை என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

இது குறித்து காவல்துறையினர் எங்கள் அமைப்பினரை அழைத்து விளக்கம் கோரியதன் பேரில் எங்கள் அமைப்பினரைச் சேர்ந்த யாரும் அவதூறான பரப்புரையோ, வலைத்தள விமர்சனமோ மேற்கொள்ளவில்லை என அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள காவல் நிலையங்களில் காவல் ஆய்வாளரிடம் உறுதிமொழி எழுதிக் கொடுத்துள்ளோம்.

ஆனால் நாங்கள் கொடுத்த உறுதிமொழிகளுக்குப் பிறகும், மாநிலம் முழுவதும் இதுவரை சுமார் 50 அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது, அவர்கள் நீதிபதிகளை அவதூறாக பேசியதாக பொய் வழக்குகள் ஜோடிக்கப்பட்டு, முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டு, அதன்காரணமாக அவர்கள் அனைவரும் துறைவாரி நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு, தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள போக்கானது அதீதமானதும், கண்டனத்திற்குரியதுமாகும். இந்த நடவடிக்கை நாள்தோறும் தொடர்ந்து கொண்டிருப்பதன் காரணமாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இடையே அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. நீதிபதிகள் மீது அவதூறு பரப்புரை எதுவும் மேற்கொள்ளவில்லை என உறுதியளித்த பிறகும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்வதை அச்சுறுத்தல் நடவடிக்கையாகவே ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்புக் குழு கருதுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வட்ட நிருவாகியாக உள்ள திரு. முருகன் பொய் புகார் காரணமாக கைது செய்யப்பட்டு ஜாமீனில் உள்ளார். ஆனால் ஜாமீன் ரத்து செய்யப்பட்டதோடு, அவரை கைது செய்வதாகக் கூறி அவரது குடும்பத்தினரை போலீசார் அச்சத்தில ஆழ்த்தி வருகி ன்றனர்.

தமிழகத்தில் அரசு ஊழியர் சங்கம் நடத்தும் போராட்டங்கள் அரசு ஊதியம் பெறும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் முதல் அடிப்படை ஊழியர் வரையிலான அனைத்து ஊழியர்களின் நலன்களையும், பலன்களையும் உள்ளடக்கிய போராட்டங்கள் என்பதை அனைத்து அதிகாரிகளும் உணர்ந்து, கோரிக்கைகளுக்காக போராடும் ஊழியர்களை குறிப்பாக திருநெல்வேலி திரு. முருகன் போன்றவர்களை தீவிரவாதிகளாக சித்தரிக்கும் வகையில் வழக்குகள் புனைவதை உடனடியாக நிறுத்த உத்தரவிட வேண்டும் என்றும், இதுசம்பந்தமாக இதுவரை அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கைகளின் மீதான நடவடிக்கைகளை கைவிட (Action Drop) செய்ய, காவல் ஆய்வாளர்களுக்கு உத்தரவிட வேண்டும் என்றும், இதன்மூலமாக அரசு ஊழியர், ஆசிரியர்கள் மற்றும் காவல் துறையினருக்கு இடையே பரஸ்பர, ஆரோக்கிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

தாங்கள் எங்கள் கோரிக்கையினை உடனடியாக பரிசீலித்து உரிய உத்தரவுகளை பிறப்பிப்பீர்கள் என உறுதியாக நம்புகிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

**பொதுச் செயலாளர்.** ■

# செவிலியர்களுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டம்

## புதுக்கோட்டை

*மாவட்டத் தலைவர் கே.நாகராஜன் தலைமையில் மாவட்டச் செயலாளர் ஆர்.ரங்கசாமி விளக்கவுரையாற்றினார். வி.கே.மனோகரன், வேலுச்சாமி, துரை.அரங்கசாமி ஆகியோர் பேசினர். மலர்விழி, அன்னபூரணி, ராஜமாணிக்கம், ராஜேந்திரன், ராஜகோபால் உட்பட பலர் பங்கேற்றனர்.*

## நாகப்பட்டினம்

*சென்னையில் போராடிய செவிலியர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் நாகை மற்றும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நாகையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் தலைமை தாங்கினார். செவிலியர் சங்க மாநில செயற்குழு உறுப்பினர் ப.ஜீவானந்தம் விளக்கவுரையாற்றினார். ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி வாழ்த்துரை வழங்கினார். வட்ட துணைத் தலைவர் எஸ்.மூர்த்தி நன்றி கூறினார். மயிலாடுதுறையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட துணைத் தலைவர் சிவ.பழனி தலைமை தாங்கினார். வட்டச் செயலாளர் சி.குருபிரசாத் விளக்கவுரையாற்றினார். அனைத்து மருந்தாளுனர் சங்க மாவட்டத் தலைவர் விஸ்வேஸ்வரன். அரசு ஊழியர் சங்க மாவட்ட இணைச் செயலாளர்கள் ஆர்.கலா மற்றும் எம்.நடராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வட்ட இணைச் செயலாளர் வெங்கடேசன் நன்றி கூறினார்.* ■

# தமிழகத்தில்
# சமூக நீதிக்கு தோண்டப்படும் சவக்குழி!

**கல்வி, வேலை வாய்ப்புகளில் தமிழக மாணவர்கள் இளைஞர்களுக்கு அநீதி,**
**பணம், பதவி அதிகார சுகங்களுக்காக தாரை வார்க்கப்படும் தமிழக மக்கள் நலன்கள்**
**தமிழக முதல்வர் உடனடியாக தலையிட்டு உரிய சட்டத் திருத்தம் மேற்கொள்ள**
**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தல்**

மகாபாரத சூதாட்டத்தில் தன் நாட்டையும், மக்களையும், சொந்த மனைவியையுமே சகுனியிடம் இழந்த ராஜாவைப் போல பணம், பதவி, அதிகார சுகம் என்ற சூதாட்டத்தில் தமிழக அரசும், அதன் அமைச்சர்களும், தமிழக மக்களின் நலன்களை ஒவ்வொன்றாக இழந்து வருகிறார்கள் என்பது அடுத்தடுத்து வரும் தமிழக மக்களை அச்சுறுத்தும் செய்திகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. காவிரியில் தொடங்கி, ஜல்லிக்கட்டு, நீட் தேர்வு, மீனவர் பிரச்சனை என தொடர்ந்து தமிழக மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் துரோகங்களின் பட்டியலில் பாலிடெக்னிக் கல்லூரிகளில் விரிவுரையாளர் தேர்வுக்கு தமிழே தெரியாத பிற மாநிலத்தவர் 90 சதவீதம் பேர் சேர ஏதுவாக விதிகள் வளைக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த அம்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப்-4 தேர்வில் வெளி மாநிலத்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

தேர்வாணையத்தின் இந்த அறிவிப்பை பல தலைவர்களும் விமர்சித்துள்ள நிலையில் ஆளும் கட்சித் தரப்பில் இதனால் தமிழக இளைஞர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்றும், தமிழகத்தின் இடஒதுக்கீட்டுக்கு இது தடையாக இருக்காது என்றும் சப்பைகட்டு கட்டப்படுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 309ன்படி, பொதுத் துறையில் நியமிக்கப்படும் பணியாளர்களின் நியமனம், பணி நிபந்தனைகள் மற்றும் பதவிகளுக்கான விதிகளை தமிழ்நாட்டுக்கான சட்டமாக இயற்றும் பொருட்டு, 2016ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) குறித்த சட்டமுன்வடிவு 2016ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டு உறுப்பினர்களின் ஒப்புதலுக்குப் பின்னர் 15.9.2016ம் தேதி அது “தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016'' ஆக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த சட்ட முன்வடிவு சட்டமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுக்காக கொடுக்கப்பட்டபோது, அதில் தமிழக இளைஞர்களின் நலன்களுக்கு எதிராக சேர்க்கப்பட்டுள்ள பிரிவு 20 “தகுதிகள்'' தலைப்பில், உப பிரிவு 7-ஐ யாரும் எதிர்த்துரைக்காததால் அது சட்டமாக இயற்றப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு 20ன் உப பிரிவு (7) கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

“20(7) மாநிலத்தின் பதவி ஒன்றிற்கு பணியமர்த்தம் செய்யப்படுவதற்கான நபர் ஒருவர் -

(அ) இந்தியக் குடிமகன் ஒருவராக அல்லது

(ஆ) நேபாளத்தின் குடிமகன் ஒருவராக

(இ) பூடானின் குடிமகன் ஒருவராக

(ஈ) இந்தியாவில் நிரந்தரமாக குடியேற வேண்டும் என்கின்ற நோக்கத்துடன் பாகிஸ்தான், பர்மா, இலங்கை அல்லது கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளாகிய கென்யா, உகாண்டா, ஐக்கிய குடியரசாகிய தான்சானியா சாம்பியா, மாளவியா, ஸெய்ரா மற்றும் எத்தியோப்பியாவிலிருந்து இந்திய வம்சா வழியினராக இருத்தல் வேண்டும்.

வரம்புரையாக, ஆனால் மாநில (ஆ), (இ) மற்றும் (ஈ) இனங்களிலிருந்து வரும் நபர் ஒருவருக்கு அவர் சார்பாக மாநில அரசால் அளிக்கப்பட்டிருக்கிற தகுதிச் சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கின்ற நபர் அவர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக, நபர் ஒருவர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அல்லது பிற

நியமன அதிகார அமைப்பால் நடத்தப்படும் தேர்வு அல்லது நேர்காணலுக்கு அவருடைய தகுதிச் சான்றிதழ் தேவையானதாக இருக்கின்றது என்கின்ற நேர்வில் அனுமதிக்கப்படலாம் மற்றும் மாநில அரசில் வழங்கப்பட்டதாக உள்ள தேவையானதாக உள்ள சான்றிதழுக்கு உட்பட்டு அவர் தற்காலிகமாக பணியமர்த்தப்படலாம்.''

ஏற்கெனவே தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி தவிக்கும் சூழ்நிலையில், தமிழகத்தின் அரசியல் ஸ்திரமற்ற தன்மை மற்றும் பிறசூழ்நிலைகள் காரணமாக பெரு நிறுவனங்கள் தொழில் தொடங்க முன்வராத நிலையில், தமிழக மாணவர்கள்/இளைஞர்கள் பத்தாம் வகுப்பு படித்திருந்தால் குரூப்-4 தேர்வெழுதி ஏதேனும் ஓர் அரசுத் துறையில் சேர்ந்துவிடலாம் என்று எண்ணியிருந்த எண்ணத்திலும் இப்போது மண் விழுந்திருக்கிறது.

பொதுமக்களின் நலன்களுக்காக அயராது பாடுபடுவதாக சொல்லிக்கொண்டு லட்சக்கணக்கில் ஊதியம் பெறும் 234 சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவர்கூட சட்டமுன்வடிவிற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் அதை சட்டமாக்கவிட்டதற்கு அவர்கள் தமிழ்நாடு மாணவர்களிடத்திலும் இளைஞர்களிடத்திலும் நிபந்தனையற்ற மன்னிப்பு கோருவதுடன், இந்த சட்டத்தில் உள்ள பிரிவு 20(7)ல் திருத்தம் செய்து முழுக்க முழுக்க தமிழக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பெறும் வகையில் உடனடியாக மாறுதல் செய்யப்பட வேண்டும்.

அண்மையில் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள பல தொழில்நுட்பக் கல்லூரிகளில் விரிவுரையாளர் பணிக்கான 1058 இடங்களில் கணிசமான வெளி மாநிலத்தவர்கள் குறிப்பாக, பொதுப் பட்டியலில் 68 விழுக்காட்டினர் தேர்வு செய்யப்பட்டுள்ள அநீதி நிகழ்ந்துள்ள நிலையில் தற்போது சாதாரண கிளார்க் பணிகளில் சேரும் வாய்ப்புகளையும் இதுபோன்ற சட்டங்கள் பறிக்கப் பார்க்கின்றன.

உண்மையிலேயே ஆட்சியாளர்களும், அதிகார வர்க்கத்தினரும் தமிழகத்தின் நலன்களை பாதிக்கும் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதை 2016ஆம் ஆண்டிலிருந்து பார்த்து வருகிறோம். மேலே இருந்து ஒருவர் தமிழகத்தில் காலூன்ற நினைப்பதில் தவறில்லை. ஆனால் அது நடக்காது என்ற காரணத்திற்காக தமிழகத்தின் நலன்களை பறிக்கப் பார்ப்பதும், அதற்கு தமிழக முதல்வரும், அமைச்சர்களும் உடந்தையாக இருந்து தமிழக மக்களின் நலன்களை தங்கள் சுயநலத்திற்காக தாரை வார்த்துக் கொடுப்பதும் கண்டனத்திற்குரியதாகும்.

எனவே, தமிழக முதல்வர் இந்த விஷயத்தில் உடனடியாக தலையிட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ல் தமிழக மாணவர்கள் இளைஞர்களின் நலன்களும், வேலைவாய்ப்பு வசதிகளும் பாதிக்காத வகையில் உடனடியாக உரிய திருத்தம் செய்ய வேண்டும் என்றும், தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ள குரூப்-4 பதவிகளுக்கான அறிவிப்பை திரும்பப் பெற்று உரிய சட்ட திருத்தம் மேற்கொண்டபின் தமிழக இளைஞர்கள் 100 சதவீதம் வேலை வாய்ப்பு பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும், இவற்றை செய்யத் தவறினால் தமிழகத்தில் உள்ள அனைத்து தரப்பினரையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திரட்டி மேற்படி சட்டத்திருத்தம் கொண்டு வரும் வரை போராட்டக் களம் காண நேரிடும். ■

## வாசகர் கடிதம்

*2017 நவம்பர் இதழ் படித்தேன். அநீதிக்கு எதிராய் அணிதிரள்வோம் தலையங்கம், அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளன மாநாடு, வாதாடி பெறுவோம் அன்றின் போராடி பெறுவோம் என்ற கட்டுரை மற்றும் அனைத்து வகையான கட்டுரைகளும் சிறப்பாக இருந்தது. அட்டைப் படத்தின் கடைசி பக்கத்தில் மத்திய, மாநில அரசு ஊழியர்களின் ஊதிய விகித ஏற்றத்தாழ்வினை விலாவரியாக புரியும்படி வெளியிட்டது மிகவும் சிறப்பு.*

- ***ரா.தட்சிணாமூர்த்தி***, *கடலூர்*

**இரத்த தானம்**
**மற்றும்**
**உடல் தானம்**
**செய்வோம்!**
**உயிர்களைக்**
**காப்போம்!**

# ஊதும் சங்கொலி உரிமை முழக்கமாக ஒலிக்கட்டும்!

## செவிலியர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்திய போராட்டம்

"மங்கை சூதகமானால் கங்கையில் குளித்து புனிதம் தேடலாம், ஆனால் கங்கையே சூதகமானால் எங்கு செல்வது?'' என்று ஒரு வழக்குமொழி நம் நாட்டில் உண்டு. தற்போது நடைபெற்று வரும் தமிழக ஆட்சியின் நிலவரமும் அப்படித்தான் இருக்கிறது. நாளொரு நாடகம், தினம் ஒரு நிகழ்வு என்ற திகிலுடனும் திருப்பங்களுடனும் நகர்ந்து கொண்டிருக்கிறது தமிழகம். இந்த அரசியல் கலவரங்கள் மக்கள் நலனுக்காகவோ, நாட்டின் வளர்ச்சிக்காகவோ அல்ல. நாற்காலி மோகத்திற்காகவும், அதிகார போகத்திற்காகவும்தான் நடைபெற்று வருகிறது என்பதை நாடே அருவெறுப்புடன் பார்த்து வருகிறது.

விவசாயிகள் போராடினார்கள், போக்குவரத்து தொழிலாளர்கள் போராடினார்கள், மீனவர்கள் போராடினார்கள், மருத்துவ மாணவர்கள் போராடினார்கள், ஆசிரியர்கள் போராடினார்கள், அரசு ஊழியர்கள் போராடினார்கள், மாற்றுத்திறனாளிகள் போராடினார்கள். இளைஞர்கள் போராடினார்கள். இவர்களின் எந்தப் போராட்டத்திலும், அரசு அவர்களை போராட்டத்திற்கு முன்பே அழைத்துப்பேசி போராட்டக்காரர்களை சமாதானப்படுத்தவோ, அரசாங்கத்தின் நிலைப்பாட்டை உணர்த்தவோ, முக்கிய அமைச்சர் முதல் முதலமைச்சர் வரை எவரும் முயற்சி எடுக்கவில்லை. இத்தகைய போராட்டங்களில் ஒன்று, நீதிமன்றத்தில் யாராவது வழக்கிட்டோ அல்லது நீதிமன்றம் தலையிட்டோதான் பிரச்சனைகளை கேட்பதற்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்பதும், நீதிமன்ற உத்தரவிற்குப் பிறகே கோரிக்கைகளை பரிசீலிக்கவும், செயல்படுத்தவும் அரசு முன்வந்துள்ளது என்பதும் கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழகத்தின் பலதரப்பட்ட மக்களும் சந்தித்து வரும் அனுபவங்களாகும்.


அதேபோன்றதொரு போராட்டம்தான் தற்போது தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் உயிருக்காக போராடும் ஜீவன்களுக்கான சிகிச்சையில், நோயாளிகளுக்கு உதவியாகவும், உறுதுணையாகவும் நிற்கும் செவிலியர்கள் வீதியில் இறங்கி நடத்தும் போராட்டம். செவிலியர்கள் போராடப் போவதாக அறிவிப்பு அரசாங்கத்திற்கு முறைப்படி அனுப்பப்பட்டும் அரசாங்கம் அதைப்பற்றி கண்டுகொள்ளாமல் எப்போதும் போல் தங்களுக்கும், போராட்டத்திற்கும் சம்பந்தமில்லை என்பதாக இருப்பது இந்த அரசின் செயல்படும் விதத்திற்கு ஒரு சிறந்த சான்றாகும்.

செவிலியர்கள் கோரிக்கை ஒன்றே ஒன்றுதான், ஒப்பந்த முறையில் பணி வழங்கப்பட்டுள்ளதை காலமுறை ஊதியமாக கடைபிடிக்க வேண்டும் என்பது. தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட போட்டித் தேர்வின் மூலம் 2015ஆம் ஆண்டில் செவிலியர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூ.7,700/- தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவர்கள், மருந்தாளுநர்கள், ஆய்வக நுட்புநர்கள் போன்றோர் காலமுறை ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள நிலையில் இவர்கள் மட்டும் அரசாணை எண்.161 (பொதுப்பணி-அ) துறை, நாள் 01.02.1962க்கு எதிராகவும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 39(ஈ) வழங்கியுள்ள "சமவேலைக்கு சமஊதியம்'' என்ற கோட்பாட்டிற்கு முரணாகவும் ஒப்பந்த முறை ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளது மாபெரும் அநீதியாகும்.

போட்டித் தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டு மற்ற அரசு ஊழியர்களைப் போல, அரசு மருத்துவமனைகளில் பணியாற்றி வரும் இவர்களும் அரசு ஊழியர்களுக்கு ஒப்பானவர்களே என்பதை உணர்ந்து, இவர்களுக்கு காலமுறை ஊதியத்தில் ஊதியம் நிர்ணயிப்பதே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் நியாயமான கடமையாக இருக்கும். செவிலியர்கள் இல்லாமல் அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் அவதியுற்று உயிருக்காக போராடிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக முறையான கோரிக்கைகள் மூலமாக தங்கள் ஊதியத்தை ஒப்பந்த முறையில் இருந்து ஒழித்து, காலமுறை ஊதியத்தில் கடைபிடிக்க வலியுறுத்தி வரும் செவிலியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு கவனத்தில் கொள்ளவோ, கேட்டு பரிசீலிக்கவோ முன்வராததால்தான் அவர்கள் இன்று ரோட்டுக்கு வந்திருக்கிறார்கள்.

செவிலியர்களின் கோரிக்கையில் நியாயம் உள்ளது. அவர்கள் போராடுவதற்கு உரிமை உள்ளது. மக்கள் நலனில் உண்மையான அக்கறை கொண்ட அரசாக இது இருக்குமானால் உடனடியாக அவர்களை அழைத்துப் பேசி, உடனடியாக ஒப்பந்த முறையை நீக்கி, காலமுறை ஊதியத்தின் அடிப்படையில் இவர்கள் பணியை முறைப்படுத்த வேண்டும். செவிலியத் துறை என்று வளர்ச்சியடைகிறதோ அன்றுதான் சுகாதாரத் துறை முழுமையான வளர்ச்சியடையும் என்பதை உணர்ந்து, உயிருக்காக அரசு மருத்துவனைகளில் நோய்களுடன் போராடிக் கொண்டிக்கும் பொதுமக்களின் நலன் கருதியேனும், இவர்களை உடனடியாக அழைத்துப் பேசி உரிய தீர்வு எட்டப்பட வேண்டும். அன்றின். **தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்** மாநிலம் முழுவதிலும் செவிலியர்களுக்கு ஆதரவாக போராட்டக் களம் காண நேரிடும் என்றும், மற்ற பிரச்சனைகள் போல இதையும் தள்ளி வைத்து காலம் கடத்த நினைக்காமல், தமிழக முதல்வர் அவர்கள் செவியர்கள் சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக அறிவித்திடவும், ஒப்பந்த முறை ஊதியத்தை ஒழித்து காலமுறை ஊதியம் வழங்கிடவும் முன்வரவேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்துகிறது. செவிலியர்கள் போராட்டத்தை, செவி கேளாதோர் காதில் ஊதிய சங்கைப் போல இவர்கள் பிரச்சனையில் செவி மெடுக்காமல் இருந்தால், ஊதும் சங்கொலி உரிமை முழக்கமாக ஒலிக்கும். அதுவே உரிமைகளின் குரல் வளையை நசுக்கப் பார்க்கும் எவருக்கும் இறுதி எச்சரிக்கையாகவும் இருக்கும் என்பதை ஆள்பவர்கள் நினைவில் கொள்க. ■

# பெரியாரின் நினைவு நாளில்



"பெரியார் பெரியார் என்று பெரிசா பேசுறீங்க அப்படி என்ன பெரிசா பன்னிட்டாரு" என்று சிலர் கதைப்பதுண்டு.

பெரியார் எனப் பரவலாக அறியப்படும் ஈ. வெ. ராமசாமி சமூக சீர்திருத்ததிற்காகவும், சாதி வேற்றுமையினை அகற்றுவதற் காகவும், மூடநம்பிக்கைகளை மக்களிடமிருந்து விடுவிப்பதற் காகவும், பெண் விடுதலைக் காகவும் போராடியவர். தமிழகத் தின் மிக முக்கியமான இயக்கமாகக் கருதப்படும் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர். இவருடைய சுயமரியாதை இயக்கமும், பகுத்தறிவுவாதமும் மிகவும் புகழ்பெற்றது. இவர் வசதியான, உயர்சாதியாகக் கருதப்பட்ட நாயக்கர் என்ற சமூகத்தில் பிறந்திருந்தும், சாதிக் கொடுமை, தீண்டாமை, மூடநம்பிக்கை, வர்ணாஸ்ரம தர்மம் கடைப்பிடிக்கும் பார்ப் பனியம், பெண்களைத் தாழ்வாகக் கருதும் மனநிலை போன்றவற்றை எதிர்த்து மக்களுக்காகக் குரல் கொடுத்தார். இம்மனநிலை வளரக் காரணமானவை மக்களிடையே இருக்கும் மூடநம்பிக்கையே, அந்த மூடநம்பிக்கைக்குக் காரணமாக இருப்பது கடவுள் நம்பிக்கையும், கடவுள் பெயரால் உருவான சமயங்களும் தான் என்பதைக் கருத்தில் கொண்டு ஈ.வெ.ரா, தீவிர நாத்திகராக இருந்தார். இந்திய ஆரியர்களால், தென்னிந்தியாவின் பழம்பெருமைவாய்ந்த திராவிடர்களை பார்ப்பனரால்லாதார் என்ற ஒரு காரணத்தினால் புறக்கணிக்கப்படுவதையும், அவர்களால் திராவிடர்களின் வாழ்வுச் சுரண்டப் படுவதையும் பெரியார் எதிர்த்தார். அவர் தமிழ்ச் சமூகத்திற்காக செய்த புரட்சிகரமான செயல்கள், மண்டிக்கிடந்த சாதிய வேறுபாடுகளை குறிப்பிடத்தக்க வகையில் அகற்றின. தமிழ் எழுத்துகளின் சீரமைவுக்கு பெரியார் குறிப்பிடத் தக்க பங்காற்றியுள்ளார். இவரின் சமுதாயப் பங்களிப்பை பாராட்டி யூனஸ்கோ நிறுவனம் "புத்துலகத் தொலை நோக்காளர், தென்கிழக்காசி யாவின் சாக்ரடிஸ், சமூக சீர்திருத்த இயக்கத்தின் தந்தை, அறியாமை மூடநம்பிக்கை, அர்த்தமற்ற சம்பிரதாயங்கள், மட்டமான பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் கடும் எதிரி" என்று பாராட்டுச் சான்றிதழ் வழங்கியுள்ளது.

இவருடைய பகுத்தறிவு, சுயமரி யாதைக் கொள்கைகள் தமிழ்நாட்டின் சமூகப் பரப்பிலும், தமிழக அரசிய லிலும் பல தாக்கங்களை ஏற்படுத் தியவை.

தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல் லாம் பயணித்துப் பகுத்தறிவுக் கொள்கைகளை விதைத்தார். எதையும் ஏன், எப்படி, எதற்கு, எதனால் எனும் வினாக்களைத் தொடுத்து சுயமாய் பதில் கண்டு முடிவெடுக்க அறிவுறுத்தினார் பெரியார்.

95 வயதிலும் நீரிழிவு நோயின் காரணமாக மூத்திரப் பையைச் சுமந்தபடி என் கடன் பணி செய்து கிடப்பதே என இடைவிடாது பகுத் தறிவுப் பகலவனாக வலம் வந்தார். தாம் கொண்ட கொள்கைக்கு நேரெதிரானவர்களாக சில தலைவர்கள் இருந்தபோதிலும் அவர்களை மதித்து அவர்கள் மனம் நோகாமல் நடந்து கொண்ட நயத்தக்க நாகரிகம் மிக்கவராகத் திகழ்ந்தவர் தந்தை பெரியார்.

அவரது நினைவைப் போற்றும் இன்றைய நாட்களில் நாட்டில் நிலவும் பிற்போக்குத்தனத்தை நினைத்துப் பார்க்கையில் வேதனையே விஞ்சி நிற்கிறது. ராகுகாலம், எமகண்டம், சகுனம் என பார்த்துப் பயணிப்பது, வாஸ்து உள்ளிட்ட ஆரூடத்தை நம்புவது, அறிவியலுக்கு முரணான மூடநம்பிக்கைகளைப் படித்த மக்களே கடைப்பிடிப்பது, சடங்கு சம்பிரதாயங்களில் மூழ்கிக் கிடப்பது, சாமியார்களின் முகத்திரைகள் கிழிந்துவரினும் ஆட்சியாளர் மற்றும் அதிகாரிகளே சாமியார்களின் பாதார விந்தங்களில் வீழ்ந்து கிடப்பது, சாதிமதக் குப்பைகளில் புரண்டு ஆறறிவிலிருந்து ஐந்தறிவாய் தரம் தாழ்வது என மானுடம் மதிப்பிழந்து வருவது போன்ற அவலங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் இன்னும் பல பெரியார்கள் மீண்டும் இம்மண்ணுக்குத் தேவையே எனும் வேட்கை எழுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக மதம் அரசியலில் கலந்து, பிற்போக்குத்தனத்தை ஆட்சியில் அமுல்படுத்துவது வெந்த புண்ணில் வேலாகப் பாய்ச்சுகிறது. தந்தை பெரியாரைப் போன்று மூடநம்பிக்கைகளைக் களைய களத்தில் நின்று மகாராஷ்டிர மண்ணில் கிளர்ச்சிப் பரப்புரை மேற்கொண்ட மருத்துவர் நரேந்திர தபோல்கர் படுகொலை செய்யப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவரைத் தொடர்ந்து அதே மகாராஷ்டிர மண்ணில் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் போராடியவரும் கம்யூனிஸ்டுமான கோவிந்த் பன்சாரே நடைபயிற்சியின்போது படுகொலை செய்யப்பட்டது வேதனையை ஏற்படுத்தியது. கர்நாடகா மாநிலத்தில் பிற்போக் குத்தனத்தை எதிர்த்து இலக்கியச் சமர் புரிந்த கல்புர்கி படுகொலை செய்யப்பட்டதும் அதே மாநிலத்தில் அவரைத் தொடர்ந்து முற்போக்குப் பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ் படுகொலை செய்யப்பட்டதும் இந்நாட்டில் மதம் அரசியலில் கலந்து ஆட்சி அதிகாரத்திலும் பகிரங்கமாக கோலோச்சுவதை உணர்த்துகின்றன.

இந்திய நாட்டின் சிறப்பம்சமான பன்முகத் தன்மையைத் தகர்க்க திட்டமிட்டியங்கும் ஆட்சியாளர்களால் 'வேற்றுமையில் ஒற்றுமை' தகர்ந்து 'ஒற்றுமையில் வேற்றுமை' மேலோங்கி வருகிறது. இன்றைய ஆட்சியாளர்கள் நடத்தும் அரசியலும் மிகமிக ஆபத்தானது என்பதை அன்றாடம் நிகழ்ந்து வரும் நிகழ்வுகள் மெய்ப்பிக்கின்றன. இந்நிலையில் சகலபகுதி முற்போக்காளர்களும் தந்தை பெரியாரின் பாதையில் ஓய்வில்லா களப்பணியாற்றி மக்கள் ஒற்றுமை எனும் மகத்தான இலக்கை அடை வோம் என பெரியாரின் நினைவு நாளில் உறுதி ஏற்போமாக!

**- பெரணமல்லூர் சேகரன்**

---

# உங்களுக்குத் தெரியுமா?

***84*** நோபல் பரிசுகள் பெற்ற ஒரே நாடு... உங்களுக்கு தெரியுமா? எல்லோரும் தெரிந்து கொள்ள ஒரு பதிவு

ஒரு சின்ன குட்டி நாடு மொத்தமே ஒன்றரை கோடி தான் மக்கள் தொகை ஆனால் உலகத்தையே அவர்கள் தான் மறைமுகமாக ஆள்கிறார்கள் எப்படி?

அந்த நாட்டை பற்றி மக்களை பற்றிய சிறு குறிப்புகள்!

கல்யாணம் பண்ணனும்னா ஏதாவது ஒரு துறையில் டாக்டர் பட்டம் வாங்கி இருக்க வேண்டுமாம்.

கல்லூரியில் சேர முதலில் 5000 டாலர் கொடுத்து ஏதாவது ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து 15 பேருக்கு வேலை கொடுத்த பின்பு அதை 15000 டாலர் ஆக்கினால் தான் கல்லூரியில் சீட் கிடைக்குமாம் இதனால் இன்று உலகத்தில் உள்ள பாதி முக்கிய ப்ரெண்டெட் நிறுவனங்கள் அந்த நாட்டை சேர்ந்தவை தான்.

உலகத்தில் உள்ள அனைத்து சிறுவர் கார்ட்டூன் படங்களை தயாரிப்பது அவர்கள் தான் அவர்கள் நாட்டின் குழந்தைகள் அதை பார்ப்பதில்லை அங்கு அது தடை செய்ய பட்டுள்ளது.

உலகத்தில் முதன் முதலாக தற்பொழுது வங்கிகளில் கடன் கொடுக்கும் கடன் வாங்கும் விதத்தை உலகத்துக்கு கத்து கொடுத்தது இவர்கள் தான்.

கர்ப்பிணி பெண்கள் தொலைக்காட்சி , சினிமா பார்க்க அனுமதிக்க படுவதில்லை , அதற்கு பதில் கர்ப்பமாக இருக்கும் பொழுது கணக்கு ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் பாடம் படிப்பார்களாம் , அப்பொழுது பிறக்கும் குழந்தைகள் அறிவாக பிறக்கிறார்களாம்..

உலகத்தில் அதிகம் நோபல் பரிசு வென்றவர்கள் இந்த நாட்டில் தான் மொத்தம் 84 பேர்.

உலகத்தில் மெத்த படித்த மேதாவிகளும் உலகத்தை மறைமுகமாக ஆளும் தந்திரமும் மிக்கவர்கள் உள்ள ஒரே நாடு.

இவர்களை யாரும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்படி இன்னும் ஏராளமான விஷயங்கள் அந்த நாட்டை பற்றி தெரிந்த உடன் இப்பொழுது தெரிகிறது அவர்கள் எல்லோரையும் ஆள என்ன காரணம் என்று. அந்த நாடு தான் இஸ்ரேல்.

தொகுப்பு : **உஷாராணி**, ஈரோடு

# அடக்குமுறைக்கு அஞ்சாத செவிலியர் போராட்டம்!

## பேச்சு வார்த்தை என அழைத்து, செவிலியர் சங்கத் தலைவர்களை அச்சுறுத்தி, அடக்குமுறையை ஏவி, போராட்டத்தை திரும்பப்பெற கட்டைபஞ்சாயத்து நடத்தி செவிலியர்களின் போராட்டத்தை ஒடுக்கப் பார்த்த ஆட்சியாளர்களின் இழிசெயலுக்கு கண்டனம்

தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட போட்டித்தேர்வின் மூலம் 2015ஆம் ஆண்டில் செவிலியர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூ.7,700/- தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவர்கள், மருந்தாளுநர்கள், ஆய்வக நுட்புநர்கள் போன்றோர் காலமுறை ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள நிலையில் இவர்கள் மட்டும் அரசாணை எண்.161 (பொதுப்பணி-அ) துறை, நாள் 01.02.1962க்கு எதிராகவும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 39(d) வழங்கியுள்ள “சமவேலைக்கு சமஊதியம்'' என்ற கோட்பாட்டிற்கு முரணாகவும் ஒப்பந்தமுறை ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளதை அரசுக்கு சுட்டிக்காட்டி கடந்த இரண்டு வருடங்களாக கோரிக்கை மனுக்கள், பிரதிநிதித்துவங்கள் மற்றும் நேரடி சந்திப்புகள் மூலம் தங்களை காலமுறை ஊதியத்தில் நிரந்தரப் பணியாளர்களாக பணியமர்த்தக் கேட்டு வருகின்றனர். அரசுத் தரப்பில் சுகாதாரத் துறை அமைச்சரோ, சுகாதாரத் துறை செயலாளரோ இவர்களது கோரிக்கைகளை ஒரு பொருட்டாக மதிக்காமல் ஏதேச்சதிகாரம் செய்து வந்ததால் தமிழகம் முழுவதிலும் அரசு மருத்துவமனைகளில் ஒப்பந்த முறையில் பணிபுரியும் செவிலியர்கள் ஒன்றுதிரண்டு 27.11.2017 முதல் 30.11.2017 வரை, உண்ண உணவின்றி, உடுத்த உடையின்றி, இயற்கை உபாதைகளை நிவர்த்தி செய்வதற்கான இடமின்றி டி.எம்.எஸ். வளாகத்தில் வாழ்வாதாரப் போராட்டம் நடத்தினார்கள்.

இதுகுறித்து ஊடகங்களில் செய்தி வெளியான பிறகு சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர் படிப்படியாக காலியிடம் உருவாகும்போது செவிலியர்கள் நிரந்தரப்படுத்தப்படுவார்கள் எனவும், அவர்களை இந்த அரசு கைவிடாது எனவும் அறிக்கை கொடுத்தார். அவர் சொன்ன படிப்படியாக நிரந்தரமாக்கப்படுவார்கள் என்பதன் பொருள் ஏற்கெனவே நிரந்தரப் பணியில் உள்ள செவிலியர்கள் ஓய்வு பெற்று அவ்விடம் காலியாகும்போது அதில் இப்போது ஒப்பந்த முறையில் பணியமர்த்தப்பட்டுள்ள செவிலியர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்பதாகும். தமிழ்நாட்டில் மொத்தமுள்ள செவிலியர் பணியிடங்கள் சுமார் 14,500. இவற்றில் ஒரு வருடத்திற்கு 200 முதல் 250 நிரந்தர செவிலியர் பணியிடங்கள், ஓய்வு, இறப்பு மற்ற இதர காரணங்களால் காலியாகும் என்று வைத்துக் கொண்டால், இப்போது ஒப்பந்த முறையில் பணியாற்றுபவர்கள் நிரந்தர பணியாளர்களாக 40 வருடங்களுக்கு மேலாக காத்திருக்க வேண்டிருக்கும்.

இதைச் சுட்டிக்காட்டி தெளிவுபடுத்தினால், செவிலியர் சங்கத் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதாகக் கூறி கட்டைபஞ்சாயத்து நடத்தி, அவர்கள் தங்கள் போராட்டத்தை உடனடியாக விலக்கிக் கொள்ளாவிட்டால் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்று காவல் துறையினரை வைத்து மிரட்டி சுமார் 4 மணி நேரத்திற்கும் மேலாக பேச்சுவார்த்தை என்ற பெயரில் அடைத்து வைத்து அச்சுறுத்தி, கடைசியில் செவிலியர் சங்கத் தலைவர்கள் அந்த இடத்திலிருந்து வெளியேற வேண்டுமானால் போராட்டத்தை விலக்கிக் கொள்வதாக சொன்னால் மட்டுமே அங்கிருந்து வெளியேற முடியும் என்ற நிலையில், சமயோசிதமாக சிந்தித்து போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக ஒப்புக்கொண்டு சுகாதாரத் துறை அமைச்சர் கட்டாயப்படுத்தியதன் பேரில் ஊடகங்களுக்கு பேட்டியளித்துவிட்டு இரவு 9.30 மணியளவில் டி.எம்.எஸ். வளாகத்திற்கு வந்து, தங்கள் சக ஊழியர்களிடம் நடந்தவற்றை தெரிவித்ததன் பேரில் செவிலியர்கள் அனைவரும் வெகுண்டெழுந்து அடக்குமுறைக்கும், அடாவடித்தனத்திற்கும், அராஜகத்திற்கும் முடிவு கட்ட போராட்டத்தை, உரிமைகளைப் பெறும் வரையில் கைவிடப் போவதில்லை என்று சூளுரைத்து போராட்டத்தை தொடர்ந்து நடத்த முடிவெடுத்துள்ளனர்.

செவிலியர்கள் இளம்பெண்கள் என்றும் பாராமல் அவர்கள் மீது அச்சுறுத்தலையும், காவல்துறை மூலம் அடக்குமுறையையும், பேச்சுவார்த்தை என்ற பெயரில் கட்டைபஞ்சாயத்து நடத்தி அடாவடித்தனத்தையும் கட்டவிழ்த்து விட்டுள்ள சுகாதாரத் துறை அமைச்சரின் சட்டவிரோதச் செயலை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. பெண்கள் என்றால் ஏளனமாக நினைக்கும் அமைச்சர்களும், அதிகாரிகளும் அவர்களை மிரட்டி, அச்சுறுத்தி பணிய வைக்கலாம் என நினைத்து செயல்பட்டிருப்பது அவமானகரமானது. சட்டப்படி போராட்டம் நடத்தவும், கோரிக்கைகளை கேட்கவும் அனைத்து தரப்பினருக்கும் உரிமை உள்ளது. போராட்டத்தில் உள்ள நியாயத்தை புரிந்துகொண்டு அதை சரி செய்ய முன்வராமல் வன்முறை, அச்சுறுத்தல், அடாவடித்தனம் போன்ற இழிசெயல்கள் மூலம் அரசின் கொள்கை இதுதான் என்பதை நிரூபித்துள்ளனர்.

ஆட்சியாளர்களின் அடாவடித்தனமும், செவிலியர்கள் போராட்டத்தை ஒடுக்க மேற்கொண்ட அணுகுமுறையும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பினரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. செவிலியர்களின் போராட்டத்தை அதிகாரம், ஆணவம் மற்றும் அச்சுறுத்தல்கள் மூலம் ஒடுக்கப் பார்த்த ஆட்சியாளர்களின் இழிசெயலைக் கண்டித்து தமிழகம் முழுவதிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் அனைத்து மாவட்ட, வட்டத் தலைநகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளின் முன்பு **29.11.2017** அன்று பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் உடனடியாக தலையிட்டு செவிலியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது. செவிலியர்கள் போராட்டம் அவர்கள் குறிக்கோளை அடையும் வரையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அவர்கள் போராட்டத்திற்கு பக்கபலமாக இருந்து ஆதரவளிக்கும்.

■

# துறைச்சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கம்

*சங்கத்தின் 13வது மாநில பிரதிநிதித்துவப் பேரவை தஞ்சாவூரில் 4, 5.11.2017 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. மாநிலத் தலைவர் எம்.சௌந்தரராஜன் தலைமையேற்றார். வரவேற்புக் குழு தலைவர் இரா.பன்னீர்செல்வம் வரவேற்றார். அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் துவக்கவுரையாற்றினார்.*

*சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆ.இரத்தினம் வேலை அறிக்கையினையும், மாநிலப் பொருளாளர் எஸ்.கோவிந்தராசு நிதிநிலை அறிக்கையினையும் முன்வைத்தனர். 32 மாவட்டங்களிலிருந்து 68 பெண் தோழர்கள் உட்பட 502 பேர் பங்கேற்றனர். முன்னாள் மாநிலத் தலைவர்கள் என்.இளங்கோ, கீ.ச.பழனி, கோ.தியாகராஜன், எம்.முருகன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.*

*4.1.2017 அன்று மாலை "ஒழிக்க முடியாததா பென்சன் திட்டம்" என்ற தலைப்பில் அரசு ஊழியர் சங்க முன்னாள் பொதுச் செயலாளர் இரா.சீனிவாசன் மற்றும் "குன்றென நிமிர்ந்து நில்" என்ற தலைப்பில் எழுத்தாளர் மற்றும் திரைப்பட இயக்குநருமான பாரதி கிருஷ்ணகுமார் ஆகியோர் கருத்துரையாற்றினர். மாநிலச் செயலாளர் எஸ்.எம்.சலீம் தலைமையேற்றார். தஞ்சாவூர் மாவட்ட இணைச் செயலாளர் எஸ்.செல்வி வரவேற்றார். மாவட்டத் தலைவர் அ.கௌதமன் நன்றி கூறினார். தஞ்சை தியாகி என்.வீ. கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.*

*பிரதிநிதிகள் விவாதத்தைத் தொடர்ந்து 36 தீர்மானங்களை மாநில நிர்வாகிகள் எம்.ஜெயராஜ், எஸ்.பகவதியப்ப பிள்ளை, ஜி.குழந்தைவேலு, ஆர்.பழனிவேல், மு.முத்துசாமி, எஸ்.இராஜப்பன், சி.சஞ்சீவி ஆகியோர் முன்மொழிந்தனர்.*

*பின்னர் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் மாநிலத் தலைவராக எம்.சௌந்தரராஜன், பொதுச் செயலாளராக ஆ.இரத்தினம், பொருளாளராக எஸ்.கோவிந்தராசு, மாநிலத் துணைத் தலைவராக எஸ்.பத்மா, மாநிலச் செயலாளர்களாக எஸ்.பகவதியப்பபிள்ளை, ஆர்.பழனிவேல், மு.முத்துசாமி, எஸ்.எம்.சலீம், எஸ்.இராஜப்பன், சி.அய்யனார், கே.எஸ்.மாரியப்பன், செல்லையா, பிச்சைவேல் ஆகியோர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர். புதியதாக தேர்வு செய்யப்பட்ட மாநில நிர்வாகிகளை அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் ஆர்.செல்வம் வாழ்த்திப் பேசினார். அரசு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். வரவேற்புக் குழு செயலாளர் ஜா.ஆ.தாவூத் அலிகான் நன்றி கூறினார்.*

* * *

*சங்கத்தின் சார்பில் 28.11.2017 மாலை நேர ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பி.பிரகாஷ் தலைமை தாங்கிட சுரேஷ் வரவேற்றார். கூட்டுறவுத் துறை அமைச்சர் ஆய்வுக் கூட்டங்களில் ஒருமையில் பேசுவதை தவிர்க்கவும், பிற துறை வேலைகள் திணிப்பதை கைவிடவும், ஓய்வு பெறும் போது பணி நீக்கம் செய்வதை கைவிடுதல் உள்ளிட்ட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அரசு ஊழியர் சங்க மாநில துணை தலைவர் எம்.சுப்பிரமணியன், மாவட்ட செயலாளர் கெ.சக்திவேல், மாவட்ட பொருளாளர் பொன்.ஜெயராம், லட்சுமணன் (கல்வித் துறை), சங்கர் (வேளாண்மை), செல்வம் (கரூர் 2 கிளை), கருணாகரன் (வருவாய் கிராம உதவியாளர் சங்கம்) ஆகியோர் பேசினர்.*

## தாலுகா அலுவலகம் முன்பு தமிழ்நாடு வருவாய்த் துறை கிராம உதவியாளர் சங்கம்

*கரூரில் 29.11.17 அன்று மாலை பட்டை நாம ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் அரசக்குமார் தலைமை தாங்கிட சுரேஷ் வரவேற்றார். குறைந்தபட்ச ஊதியம் ஓய்வூதியம் போனஸ் அரசு ஊழியருக்கு இணையாக வழங்க வேண்டும் உள்ளிட்ட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் மு.மகாவிஷ்ணன், மாவட்ட செயலாளர் கெ.சக்திவேல், லட்சுமணன் (கல்வித் துறை), சந்திரசேகர் (பட்டு வளர்ச்சித் துறை), செல்வம் (கரூர் 2 கிளை), கருணாகரன் (மாநில செயலாளர் வருவாய் கிராம உதவியாளர் சங்கம்) ஆகியோர் பேசினர்.* ■

# அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம்

## 16ஆம் தேசிய மாநாடு 2018 ஏப்ரல் 5–8 சென்னை

## வரவேற்புக் குழு


தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

46,தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

போன்: 2844 1286,2844 0938 E-mail : tngeags@gmail.com


| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| டி.கே.ரங்கராஜன், M.P. | மு.அன்பரசு | எம்.தங்கராஜ் |

### நிர்வாகக் குழு

**மாநிலத் தலைவர், TNGEA**

**மு.சுப்பிரமணியன்**

**மாநில துணைத் தலைவர்கள்**

**ந.குமாரவேல்**

**ஆ.செல்வம்**

**எஸ்.தமிழ்ச்செல்வி**

**எஸ்.பார்த்திபன்**

**மொ.ஞானத்தம்பி**

**எம்.சுப்பிரமணியன்**

**மாநிலச் செயலாளர்கள்**

**இரா.பன்னீர்செல்வம்**

**சி.ஆர்.இராஜகுமார்**

**என்.ஜனார்த்தனன்**

**தி.கலைசெல்வி**

**எம்.சௌந்தரராஜன்**

**ஆ.பெரியசாமி**

## அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் 16வது மாநில மாநாடு வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம்

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16ஆம் மாநாட்டினை மிகச் சிறப்பாக நடத்திட, வரவேற்புக் குழு அமைக்க சென்னை கேரள சமாஜத்தில் மாநிலத் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநிலச் செயலாள ரும், தேசிய செயற்குழு உறுப்பினருமான தோழர் தி.கலைச்செல்வி வரவேற்புரையாற்றினார். பொதுச் செயலாளர் தோழர் மு.அன்பரசு வரவேற்புக் குழு ஏற்படுத்துவது பற்றியும், பொறுப்பாளர்களை முன்மொழிந்தும் பேசினார். வரவேற்புக் குழு தலைவராக மாநிலங்களவை உறுப்பினரும், சிஐடியு அகில இந்திய துணைத் தலைவருமான தோழர் டி.கே.ரங்கராஜன் அவர்களும், செயலாளராக தோழர் மு.அன்பரசு அவர்களும், பொருளாளராக தோழர் எம்.தங்கராஜ் அவர்களும் உள்ளிட்ட வரவேற்புக் குழு (பட்டியல்படி) முழுமையாக ஏற்கப்பட்டது.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் நெ.இல.சீதரன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் இரா.சீனிவாசன், முன்னாள் மாநில துணைத் தலைவர் தோழர் இரா.ஜோதி, வருமான வரித்துறை ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.வெங்கடேசன், தலைமைச் செயலக ஊழியர் சங்கத்தின் செயலாளர் தோழர் கு.வெங்கடேசன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

மத்திய அரசு ஊழியர் மகாசம்மேளனத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர் எம்.துரைப் பாண்டியன், சிஐடியு அகில இந்திய துணைத் தலைவர் தோழர் ஏ.கே.பத்மநாபன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மதுரை மாவட்டச் செயலாளர் முனைவர் சு.கிருஷ்ணன் உள்ளிட்ட தோழர்கள் தேசிய மாநாட்டிற்கான நிதி முதல் தவணையாக ரூ.10,000 வரவேற்புக் குழுத் தலைவர்

தோழர் டி.கே.ரங்கராஜன் அவர்களிடம் வழங்கினார். வரவேற்புக் குழுத் தலைவர் பொறுப்பு ஏற்றுக்கொண்டு தோழர் டி.கே.ரங்க ராஜன் எம்.பி., அவர்கள் மாநாட்டை சிறப்பாக நடத்திட வேண்டியதன் அவசியத்தையும் நோக்கத் தினையும் வலியுறுத்தி சிறப்புரையாற்றினார். மாநில துணைத் தலைவரும் தேசிய செயற்குழு உறுப்பினருமான தோழர் மொ.ஞானத்தம்பி நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

கீழ்க்கண்ட தோழர்கள் வரவேற்புக் குழு பொறுப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

வரவேற்புக் குழு தலைவர் டி.கே.ரங்கராஜன்

வரவேற்புக் குழு செயலாளர் மு.அன்பரசு

வரவேற்புக் குழு பொருளாளர் எம்.தங்கராஜ்

நிர்வாகக் குழு தலைவர் மு.சுப்பிரமணியன்

நிர்வாகக் குழு உறுப்பினர்கள்

ந.குமாரவேல், ஆ.செல்வம், எஸ்.தமிழ்ச்செல்வி, எஸ்.பார்த்திபன், மொ.ஞானத்தம்பி, எம்.சுப்பிரமணியன், இரா.பன்னீர்செல்வம், சி.ஆர்.இராஜகுமார், என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி, எம்.சௌந்தரராஜன், ஆ.பெரியசாமி

**வரவேற்புக் குழு துணைத் தலைவர்கள்**

அ. சவுந்தரராஜன், மாநிலத் தலைவர், சிஐடியு

மாலதி சிட்டிபாபு, மாநில அமைப்பாளர், உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு, சிஐடியு

எம்.பகவதி, சிஐடியு

ஏ. லாசர், மாநிலத் தலைவர் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம்

கு. வெங்கடேசன், செயலாளர், தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம்

எம். துரைபாண்டியன், மாநில பொதுச்செயலாளர், மத்திய அரசு ஊழியர் மகாசம்மேனம்

மீராபாய், ம.அ.ஊ.மகா சம்மேளனம்

கே. ரமேஷ், பொருளாளர், அகில இந்திய கணக்கு தணிக்கை ஊழியர் சங்கம்

எம். சுந்த்ரேஸ்வரர், செயலாளர்,அகில இந்திய கணக்கு தணிக்கை ஊழியர் சங்கம்

எஸ்.எஸ். சுப்பிரமணியன், மாநில தலைவர், தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

என்.அபிமன்யு, DREU

டி. ரவிக்குமார், துணைத்தலைவர், BEFI -TN.

எம். செந்தூர்பாண்டியன், துணைசெயலாளர்,BEFI -TN.

எஸ். சுரேஷ்குமார். துணைத்தலைவர், இந்தியன் ஆயில் ஊழியர் சங்கம்

எஸ். வெங்கடேசன், பொதுச்செயலாளர், வருவமானவரித்துறை ஊழியர் சங்கம்

ஆர். ரமேஷ்சுந்தர், செயலாளர், FMRAI

கு. முருகன், மாநில துணைத் தலைவர், TARATDAC

எஸ்.கே. குலாம் தஸ்தஹிர், தலைமையிடச் செயலாளர், த.நா.மு.பட்டதாரி ஆசிரியர் சங்கம்

ஆர். பெருமாள்சாமி, மாவட்டச்செயலாளர், த.நா.முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்கம்

எம். நாகராஜன், பொதுச்செயலாளர், AIIEA, சென்னை மண்டலம்

என்.பாலகிருஷ்ணன், செ. மண்டல இன்சூ.ஊ.சங்கம்

எஸ்.சிவசுப்ரமணியம், அ.இ.இன்சூ. ஊழியர் சங்கம்

ஏ.எஸ். பாபுராதாகிருஷ்ணன், மாநில செயலாளர்,பிஎஸ்என்எல் ஊழியர் சங்கம்

எம்.கன்னியப்பன், பிஎஸ்என்எல் ஊழியர் சங்கம்

ஜி. கண்ணன், கன்வீனர், NFPE

அ. மாயவன், நிறுவன தலைவர்,த.நா. முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம்

எஸ்.பக்தவச்சலம்,மாநிலத் தலைவர், த.நா. முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம்

ஜீவானந்தம், மாநில பொருளாளர், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

இரா.காளீஸ்வரன், தமுஎகச

உதயன், த.நா.அறிவியல் இயக்கம்

பாக்கியம், அ.இ.ஜ.மாதர் சங்கம்

தாமு, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம்

ஜான்சி, இந்திய மாணவர் சங்கம்

**புரவலர்கள்**

கே. ராமசாமி, முன்னாள் மாநில துணைத்தலைவர்

ஏ. ஜெயராமன், முன்னாள் மாநில துணைத்தலைவர்

ஆர். ஜோதி, முன்னாள் மாநில துணைத்தலைவர்

எஸ். ஆறுமுகம், முன்னாள் மாநில துணைத்தலைவர்

பி.வி. சந்திரசேகரன், முன்னாள் மாநில துணைத்தலைவர்

ட்டி. புருசோத்தமன், முன்னாள் மாநில துணைத்தலைவர்

இரா. பீட்டர்பர்னபாஸ், முன்னாள் மாநில துணைத்தலைவர்

என். ஜெயச்சந்திரன், முன்னாள் மாநில துணைத்தலைவர்

பா. ரவி, முன்னாள் மாநில துணைத்தலைவர்

க. தங்கராசு, முன்னாள் மாநில துணைத்தலைவர்

சு. சிவகுமார், முன்னாள் மாநில துணைத்தலைவர்

கே. அகோரம், முன்னாள் மாநில துணைத்தலைவர்

எஸ்.ஏ. வெற்றிராஜன், முன்னாள் மாநில துணைத்தலைவர்

கோ. சுகுமார், முன்னாள் மாநில துணைத்தலைவர்

கே.எம். தியாகராஜன், முன்னாள் மாநில துணைத்தலைவர்

பி. கிருஷ்ணசாமி, முன்னாள் மாநில துணைத்தலைவர்

எம். மெய்யப்பன்,முன்னாள் மாநில துணைத்தலைவர்

பி.எஸ். அப்பர், முன்னாள் மாநில துணைத்தலைவர்

என்.எல். சீதரன், முன்னாள் மாநிலத்தலைவர்

க. ராஜ்குமார், முன்னாள் மாநிலத்தலைவர்

ஆர். தமிழ்செல்வி, முன்னாள் மாநிலத்தலைவர்

கே.ஆர். சங்கரன், முன்னாள் பொதுச் செயலாளர்

இரா. சீனிவாசன், முன்னாள் பொதுச் செயலாளர்

ஆர். பாலசுப்பிரமணியன், முன்னாள் பொதுச் செயலாளர்

ஏ. ராமசாமி, முன்னாள் மாநிலச் செயலாளர்

அ. நிசார்அகமது, முன்னாள் மாநிலச் செயலாளர்

அ. இராஜாபாதர், முன்னாள் மாநிலச் செயலாளர்

என். அரங்கநாதன், முன்னாள் மாநிலச் செயலாளர்

ஆர். குமார், முன்னாள் மாநிலச் செயலாளர்

ச.இ. கண்ணன்,முன்னாள் மாநிலச் செயலாளர்

என். ஞானகுரு,முன்னாள் மாநிலப் பொருளாளர்

வி. தேவன், முன்னாள் மாநிலப் பொருளாளர்

என். இளங்கோ, முன்னாள் மாநிலப் பொருளாளர்

வே. கணபதி, முன்னாள் மாநிலப் பொருளாளர்

தோழர் எஸ். விஜயன், முன்னாள் மாநில தணிக்கையாளர்

தோழர் எஸ். அருமைநாதன், முன்னாள் மாநில தணிக்கையாளர்

தோழர் எஸ்.ஏ. முபாரக்பாட்சா, முன்னாள் மாநில தணிக்கையாளர்

தோழர் சே. இரமணி, முன்னாள் மாநில தணிக்கையாளர்

**ஒருங்கிணைப்பாளர்கள் (வட, தென் சென்னை மாவட்ட நிர்வாகிகள்)**

சா.டேனியல் ஜெயசிங், ம.அந்தோனிசாமி, ஜெ.பட்டாபி, எம்.வெங்கடேசன், ப.புகழேந்தி, எஸ்.பார்த்திபன், ப.சுந்தரம்மாள், பா.பத்மநாபன், த.குணசேகரன், ஆர்.என்.நம்பிராஜன், நா.விநோத்குமார், கி.இரகுராமன், உ.சுமதி, எஸ்.பிரபுராம், வி.விஜயகுமார், ஜெ.சரஸ்வதி, வி.விஜயகுமரன், த.கோவிந்தராஜன், இரா.வெற்றிச்செல்வன், தெ.வாசுகி, எம்.சுதா

**இணை ஒருங்கிணைப்பாளர்கள்**

***(மாநில செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மகளிர் துணைக்குழு உறுப்பினர்கள், TNGEA)***

**வடசென்னை** மு.விவேகானந்தன், **தென் சென்னை** என்.மணிமாலா, எம்.செந்தில்குமார், எம்.பாரிவள்ளல், **காஞ்சிபுரம்** வி.லெனின், சி.முகமது உசேன், மு.தாமோதரன், எம்.பி.திலகம், **திருவள்ளூர்** கோ.இளங்கோவன், ஜா.வே.அருள்டேனியல், ஆர்.பாண்டுரங்கன், கே.திவ்யா, **வேலூர்** க.சரவணராஜ், ப.இராஜாமணி, கி.ஆண்டாள், **திருவண்ணாமலை** கோ.வேடியப்பன், மு.பாஸ்கரன், செ.முரளி, எம்.பார்வதி, **விழுப்புரம்** வி.நாராஜன், கே.மகாலிங்கம், ஜெ.ஜெயசங்கர், **கடலூர்** எல்.அரிகிருஷ்ணன், கே.செந்தில்குமார், **தருமபுரி** எம்.சுருளிநாதன், ஏ.சேகர், பி. பிரபாகரன், பி.எஸ். இளவேனில், **கிருஷ்ணகிரி** பி.சந்திரன், சி.பி.ஜெயராமன், ஜி.வெங்கேடசன், கே.நாகரத்தினா, **சேலம்** சி.முருகப்பெருமாள், இ.கோவிந்தராஜ், வி. தெவிட்டாமணி, **நாமக்கல்** கு.ராஜேந்திரபிரசாத், ஆர்.முருகேசன், இரகுராம், **ஈரோடு** ஜெ.பாஸ்கர்பாபு, கே.வெங்கிடு, வி.உஷாராணி, ஆர்.ராஜசேகரன், **திருப்பூர்** இரா.பாஸ்கரன், ஆ.அம்சராஜ், எம்.பாலசுப்பிரமணியன், எஸ். சத்தியவாணிமுத்து, **கோவை** வே.செந்தில்குமார், சு.குமார், **நீலகிரி** கே.ஆனந்தன், ஏ.ஆர்.ஆஸரா, சி. பரமேஸ்வரி, கே.சாந்தகுமாரி, **கரூர்** மு.மகாவிஷ்ணன், கே.சக்திவேல், சி.விஜயகுமார், **பெரம்பலூர்** கி.ஆளவந்தான், ஆ.தெய்வராஜா, **அரியலூர்** ஜி.பஞ்சாபிகேசன், பா.துரைவேந்தன், சே.காமராஜ், **திருச்சி** எம்.கென்னடி, பொ.பழனிச்சாமி , ஜெ.எலிசபத்ராணி, **புதுக்கோட்டை** கே.நாகராஜன், ஆர்.ரங்கசாமி, துரை.அரங்கசாமி, சொ.செல்வமீனாள், **சிவகங்கை** ஆர்.தமிழரசன், சு.குமரேசன், மா.அளகேசன், **திண்டுக்கல்** சி.தங்கவேல், எஸ்.முபாரக் அலி , மா.சுகந்தி, **இராமநாதபுரம்** எம்.கருணாநிதி, பி. சேகர், கே.பாலமுருகன், **மதுரை** மு.முருகன், முனைவர்.சு.கிருஷ்ணன் , ஆர்.பாண்டியம்மாள், இரா.தமிழ், அ.அமுதா, **தேனி** எஸ்.கே.கிருஷ்ணமூர்த்தி, ம.முகமதுஅலி ஜின்னா, ச. தாஜுதீன், **தஞ்சாவூர்** எஸ்.கோவிந்தராசு, ஆ.ரெங்கசாமி, ஆர்.ஞானசூரியன், ச.செல்வி, ச.ஹேமலதா, **திருவாரூர்** ஜி.பைரவநாதன், வி.சோமசுந்தரம், தே.மணிவன்னன், தி.சுப்புலட்சுமி, **நாகப்பட்டிணம்** ப.அந்துவன்சேரல், ஏ.டி.அன்பழகன், ச.குருபிரசாத், பா.ராணி, **விருதுநகர்** சு.முத்துராஜ், ச.இ.கண்ணன், ஜெ. லெட்சுமிநாராயணன், அ.உலகநாதன், ஆர்.அய்யம்மாள், **தூத்துக்குடி** ஞா.கலையரசன், ந.வெங்கடேசன், சின்னதம்பி, ஆ.மகேஸ்வரி, **திருநெல்வேலி** வீ.பார்த்தசாரதி, க.துரைசிங், க.கங்காதரன், **கன்னியாகுமரி** எஸ்.பகவதியபிள்ளை, சி.எஸ்.கிருஸ்டோபர், யு.சுமதி, ஆர். சௌந்தரராஜன், பெர்பச்சுவல் பி. ரோசிட்டா

**துணைச் செயலாளர்கள்**

**பி.கிருஷ்ணமூர்த்தி,** த.நா. அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கம்

**கே. குமரேசன்,** மாநிலத் தலைவர், த.நா. வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

**ஆர். காயம்பு,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு நில அளவர் ஒன்றிப்பு

**ஆ. பாலகிருஷ்ணன்,** மாநிலத் தலைவர், த. நா. கருவூல கணக்குத்துறை

**அ. சேகர்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கம்

**கி. முத்துகுமார்,** மாநிலத் தலைவர், த.நா.நெடுஞ்சாலைத்துறை ஊழியர் சங்கம்

**சி. ராமலிங்கம்,** மாநிலத் தலைவர், த.நா. தொழில்பயிற்சி அலுவலர் சங்கம்

**ஏ.ஜீவானந்தம்,** மாநிலத் தலைவர், த.நா. மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கம்

**இராஜேந்திரன்,** மாநிலத் தலைவர்,தமிழ்நாடு உதவி ஆணையர், வணிகவரி அலுவலர் மற்றும் துணை வணிவரி அலுவலர்கள் சங்கம்

**அ. இலட்சமணசிங்**, மாநிலத் தலைவர், த.நா. புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்கம்

**எஸ். நடராஜன்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு அரசு சுகாதார போக்குவரத்துத்துறை ஊழியர் சங்கம்

**ம. செல்வகுமார்,** மாநிலத்தலைவர்,தமிழ்நாடு மருத்துவ ஆய்வக நுட்பனர் சங்கம்

**எம். சிவப்பிரகாசம்,** மாநிலத் தலைவர்,த.நா .பட்டுவளர்ச்சித்துறை ஊழியர் சங்கம்

**வி. ராஜாராம்,** மாநிலத் தலைவர்,இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர் சங்கம்

**எஸ்.ஏ. சைய்யது உசேன்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு நகராட்சி , மாநகராட்சி அலுவலர் சங்கம்

**பி. கருணாகரன்,** மாநிலத் தலைவர்,தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம்

**எஸ். பார்த்திபன்,** மாநிலத் தலைவர்,த.நா. அரசு அருங்காட்சியக ஊழியர் சங்கம்

**கோ. நாகலிங்கம்,** மாநிலத் தலைவர்,தமிழ்நாடு கதர்கிராம தொழில் வாரியஅமைச்சுப் பணியாளர் சங்கம்

**பா. வேல்முருகன்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு உள்ளாட்சிநிதி தணிக்கைத்துறை பணியாளர் மன்றம்

**J. இரவிச்சந்திரன்,** மாநிலத் தலைவர், த.நா. வேலைவாய்ப்புத்துறை ஊழியர் சங்கம்

**பி. ரவி,** தலைவர்,அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரி தொழில்நுட்ப அலுவலர் சங்கம்

**எஸ். உமாராணி,** மாநிலத் தலைவர்,தமிழ்நாடு பேரூராட்சி ஊழியர் சங்கம்

**ஜி. வெங்கடேசன்,** மாநிலத் தலைவர்த.நா. பொதுநூலகத்துறை அலுவலர் சங்கம்

**சிவசண்முகம்,** மாநிலத் தலைவர்,தமிழ்நாடு வேளாண்மை பொறியாளர்கள்சங்கம்

**ச. இசக்கிமுத்து,** மாநிலத்தலைவர்,த.நா. உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்கம்

**M. கருப்பசாமி,** மாநிலத் தலைவர்,தமிழ்நாடு அரசு தொழிற்பயிற்சி நிலைய அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படை பணியாளர் சங்கம்

**வி. கோவிந்தராஜன்,** மாநிலத் தலைவர்,தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கம்

**ஆ. போஸ்,** மாநிலத் தலைவர்,த.நா. உணவுப் பாதுகாப்பு அலுவலர் சங்கம்

**இரா. சுந்தர்,** தலைவர்,தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நிர்வாக ஊழியர் சங்கம்

**கே.எம். முகம்மது ஷக்கர்,** மாநிலத்தலைவர்,தமிழ்நாடு நில அளவை அமைச்சுப்பணி ஊழியர் சங்கம்

**எஸ். ஆறுமுகம்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு கூட்டுறவு தணிக்கைத்துறை ஊழியர் சங்கம்

**பிரான்சிஸ்சேவியர்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு தொழிலாளர் (ம)தொழிற்சாலை ஆய்வகத்துறை ஊழியர் சங்கம்

**அசோக்குமார்,** தலைவர், வருவாய் நிர்வாக, மதுவிலக்கு(ம)ஆயத்தீர்வை, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை அலுவலர் சங்கம்

**பாலாஜி,** தலைவர், நகர்புற நிலவரி(ம)உச்சவரம்புத்துறை ஊழியர் சங்கம்

**செந்தில்,** தலைவர், நில சீர்த்திருத்த ஆணையரக ஊழியர் சங்கம்

**முத்தமிழ்செல்வன்,** மாநிலத் தலைவர், பிற்பட்டோர்(ம)மிகவும் பிற்பட்டோர் நலத்துறை நிர்வாக ஊழியர் சங்கம்

**எஸ்.வி. ஏகநாதன்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு சாலை ஆய்வாளர் சங்கம்

**ஆர். சேகர்,** மாநிலத் தலைவர்,தமிழ்நாடு சிறப்புக்காவல் அடிப்படை ஊழியர் சங்கம்

**சுரேஷ்பாபு,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு ஆவண காப்பக ஊழியர் சங்கம்

**சை. வில்சன்,** மாநிலத் தலைவர், முன்னாள் படைவீரர் நலத்துறை நிர்வாக ஊழியர் சங்கம்

**கணேசன்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு அரசு கன்னிமாரா பொது நூலக ஊழியர் சங்கம்

**மு. பார்த்திபன்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு வனத்துறை அலவலகப் பணியாளர் சங்கம்

**இரா. நரேந்திரன்,** மாநிலத் தலைவர், மருத்துவத்துறை இசிஜி நுட்புர்கள் சங்கம் (த.நா.)

**எம்.என். ஸ்ரீராம்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு அரசு கண் மருத்துவ உதவியாளர் சங்கம்

**ஏ. நஸிமாபி,** தலைவர், அரசு தகவல் தொகுப்பு விவர மைய பணியாளர் சங்கம்

**கி. கந்தசாமி,** தலைவர், உணவுபொருள் வழங்கல் (ம)நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர் சங்கம்

**ப. இராதாகிருஷ்ணன்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரிய பணியாளர் சங்கம்

**கே. வெங்கடேசன்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கம்

**சி. அங்கம்மாள்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம்

**கே. கிருஷ்ணமூர்த்தி,** மாநிலத் தலைவர், அரசு அச்சக தொழில்நுட்ப ஊழியர் சங்கம்

**கே. முனியன்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு மருத்துவத்துறை தொழில் நுட்ப ஊழியர் சங்கம்

**சி. இலட்சுமணன்,** தலைவர், தமிழ்நாடு மனநல காப்பக ஊழியர் சங்கம்

**த. பாலகுரு,** தலைவர், சென்னை மாநகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் சங்கம்

**எஸ். மனோகரன்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு காவல்போக்குவரத்து பணிமனை ஊழியர் சங்கம்

**ஜி. சுப்பிரமணியன்,** மாநிலத் தலைவர்,த.நா. நெடுஞ்சாலை இயந்திரபோக்குவரத்து தளவாட பொதுதொழிலாளர் சங்கம்

**இணைச்செயலாளர்கள்**

**பி. கிருஷ்ணசாமி,** மாநில பொதுச்செயலாளர், த.நா. ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம்

**டி. செந்தில்குமார்,** மாநில பொதுச்செயலாளர்,தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம்

**அ. ரத்தினம்**, பொதுச்செயலாளர், த.நா. அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம்

**சு. ரமேஷ்,** பொதுச்செயலாளர், தமிழ் நில அளவை அமைச்சுப்பணி ஊழியர் சங்கம்

**ஆர். பாலசுப்ரமணியன்,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவன தொழிலாளர் சங்கம்

**சு. ஜெயராஜராஜேஸ்வரன்,** பொதுச்செயலாளர், த.நா. வணிகவரிப் பணியாளர் சங்கம்

**க. லட்சுமணன்,** பொதுச்செயலாளர்,தமிழ்நாடு உதவி ஆணையர், வணிகவரி அலுவலர் மற்றும் துணை வணிவரி அலுவலர்கள் சங்கம்

**பொன். ஜெயராமன்,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாகஅலுவலர் சங்கம்

**எஸ். முருகேசன்,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம்

**எஸ். தமிழ்ச்செல்வன்,** மாநில பொதுச்செயலாளர்,த.நா. வருவாய் கிராம உதவியாளர் சங்கம்

**என். ரமேஷ்,** பொதுச்செயலாளர் , த.நா. தொழிற் பயிற்சி அலுவலர் சங்கம்

**ஏ. பாலமுருகன்,** மாநில பொதுச்செயலாளர், தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கம்

**க. இராஜசேகரன்,** பொதுச்செயலாளர்,தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நிர்வாக ஊழியர் சங்கம்

**M. தனசேகரன்,** பொதுச்செயலாளர், த.நா. வேலைவாய்ப்புத்துறை ஊழியர் சங்கம்

**ஆர். இராமதாஸ்,** பொதுச்செயலாளர், த.நா. தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வுத்துறை

ஊழியர் சங்கம்

**ப.பாரதி,** மாநில பொதுச்செயலாளர்,இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர் சங்கம்

**கி. முத்துகுமார்,** பொதுச்செயலாளர், த.நா. வேளாண்துறை அமைச்சுப்பணியாளர் சங்கம்

**இ. கண்ணுசாமி,** பொதுச்செயலாளர்,த.நா. உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்கம்

**ஜி. கோமதிநாயகம்,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு பொ.ப.து. கணக்கும் மற்றம் ஆட்சிப்பணி அலுவலர் சங்கம்

**எம். மாரிமுதது,** பொதுச்செயலாளர், தமிழநாடு சாலை ஆய்வாளர் சங்கம்

**சி. துரைசாமி,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு கதர்கிராம தொழில் வாரிய அமைச்சுப்பணியாளர் சங்கம்

**பி. இளங்கோ,** பொதுச்செயலாளர்,அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரி தொழில்நுட்ப அலுவலர் சங்கம்

**எம். அருண்ராவ்,** மாநில பொதுச்செயலாளர்,தமிழ்நாடு சிறப்புக்காவல் அடிப்படை ஊழியர் சங்கம்

**எஸ். கனகராஜ்,** பொதுச்செயலாளர்,தமிழ்நாடு பேரூராட்சி ஊழியர் சங்கம்

**சரவணன்,** பொதுச்செயலாளர்,த.நா. பொதுநூலகத்துறை அலுவலர் சங்கம்

**ச. பிரவீன்,** பொதுச்செயலாளர்,த.நா. அரசு அருங்காட்சியக ஊழியர் சங்கம்

**ரமேஷ்,** பொதுச்செயலாளா,த.நா.மறுவாழ்வுத்துறை ஊழியர் சங்கம்

**ரவி,** பொதுச்செயலாளர்,தமிழ்நாடு அரசு தொழிற்பயிற்சி அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படை ஊழியர் சங்கம்

**ஆர்.எம். கன்னியப்பன்,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு தணிக்கைத்துறை ஊழியர் சங்கம்

**சுபிசந்த**ர், செயலாளர், வருவாய் நிர்வாக, மதுவிலக்கு(ம)ஆயத்தீர்வை, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை அலுவலர் சங்கம்

**பிக்கையா,** பொதுச்செயலாளர், பிற்பட்டோர்(ம)மிகவும் பிற்பட்டோர் நலத்துறை நிர்வாக ஊழியர் சங்கம்

**கிருஷ்ணமூர்த்தி,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு ஆவண காப்பக ஊழியர் சங்கம்

**எம். இப்ராஹிம்ஷெரிப்,** பொதுச்செயலாளர், முன்னாள் படைவீரர் நலத்துறை நிர்வாக ஊழியர் சங்கம்

**பி. புகழானந்த்,** செயலாளர், தமிழ்நாடு அரசு கன்னிமார பொது நூலக ஊழியர் சங்கம்

**ப்பி. அம்பேத்கார்,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு உள்ளாட்சிநிதி தணிக்கைத்துறை பணியாளர் மன்றம்

**எஸ். கிருஷ்ணமூர்த்தி,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு வனத்துறை அலவலகப் பணியாளர் சங்கம்

**டி. இரவிக்குமார்,** பொதுச்செயலாளர், மருத்துவத்துறை இசிஜி நுட்புர்கள் சங்கம் (த.நா.)

**எஸ். சுகுமார்,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு அரசு கண் மருத்துவ உதவியாளர் சங்கம்

**எஸ். கணபதி,** செயலாளர், அரசு தகவல் தொகுப்பு விவர மைய பணியாளர் சங்கம்

**தா. ஹரினிதேவி,** பொதுச்செயலாளர், உணவுபொருள் வழங்கல் (ம)நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர் சங்கம்

**ஆர். தாமோதரன்,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கம்

**டி. டெய்சி,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம்

**பி. இராயல் சந்தோஷநாதன்,** செயலாளர், தமிழ்நாடு மனநல காப்பக ஊழியர் சங்கம்

**ஆர். விக்னேஸ்வரன்,** செயலாளர், சென்னை மாநகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் சங்கம்

**ந. வெங்கடகிருஷ்ணன்,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு காவல் போக்குவரத்து பணிமனை ஊழியர் சங்கம்

**ஏ. பழனிவேலு,** செயலாளர், பாசன மேலாண்மை பயிற்சி நிலைய ஊழியர் சங்கம்

மற்றும் துறைவாரி, பிரிவுவாரி சங்கங்களின் இளந் தோழர்கள் 200 பேர் பணிக்குழு உறுப்பினர்கள் ■

தோழர் ஆர்.எம்.எஸ். நினைவலைகள்

**நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வின் சுருக்கப் பதிவுகள்**

# முத்துசுந்தரம் அரசு ஊழியர் சங்கத்தின் சொத்து

**தோழர் ஸ்ரீகுமார்,**
பொதுச் செயலாளர்,
அகில இந்திய மாநில அரசு ஊழியர்
சம்மேளனம்

காம்ரேட் சுப்பிரமணியம், காம்ரேட் ஏ.கே.பி., காம்ரேட் நூர்முகம்மது மற்றும் உள்ள காம்ரேட்ஸ், ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் கேரளா மாநிலங்களிலிருந்து வந்திருக்கும் நமது அன்பிற்குரிய காம்ரேட்களே, மிகுந்த வருத்தத்தோடு இந்த மேடையில் நான் நின்றுகொண்டிருக்கிறேன். காம்ரேட் முத்துசுந்தரம் அவர்களைப் பற்றி சில விஷயங்களைக் கூற இது தகுந்த நேரம் என்று நினைக்கிறேன். காம்ரேட் முத்துசுந்தரத்தைப் பற்றியும் அவருடைய இயக்க நடவடிக்கைகளைப் பற்றியும் என்னைவிட நீங்கள் கூடுதலாகவே அறிந்திருப்பீர்கள். என்னுடைய வலதுபுறம் காம்ரேட் முத்துசுந்தரத்தின் குடும்பத்தினர் அமர்ந்துள்ளனர். காம்ரேட் ஆர்எம்எஸ் அவர்களுடன் இருந்தபோதெல்லாம் கவனித்திருக்கிறேன், அவர் எப்போதும் தன்னுடைய குடும்பத்தைக் காட்டிலும் இந்த இயக்கத்தைப் பற்றியும் இயக்க நடவடிக்கைகளைப் பற்றியுமே சிந்தித்துக் கொண்டிருப்பார். 2008 டிசம்பரில் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத் தின் மாநாட்டில் காம்ரேட் முத்துசுந்தரம் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப் பட்டார். 2013ம் ஆண்டு என் நினைவில் இருக்கிறது. அது இந்த இயக்கத்தையும் இயக்க நடவடிக்கைகளையும் முன்னெடுத் துச் செல்வதற்கு ஒரு இக்கட்டான கால கட்டமாக இருந்தது. அந்த சமயத்தில் பெரும்பாலான மாநிலங்கள் புதிய பொரு ளாதாரக் கொள்கையை மாநில சட்டமாக மாற்ற ஆரம்பித்திருந்தன. காம்ரேட் முத்து சுந்தரம் அப்போது புதிய பொருளாதாரக் கொள்கையின் பாதகங்களை விளக்கி நாடு முழுவதும் பிரச்சாரம் நடத்தி அனைவரிடத் திலும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அவரின் இழப்பு அவருடைய குடும்பத்திற்கு மட்டுமல்ல, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் மற்றும் எல்லோருக்கும் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். தோழர் முத்துசுந்தரம் எல்லோரையும் கவர்ந்தவர். அவரிடம் இந்திய தொழிலாளர் இயக்கத்தைப் பொறுத்து தெளிவான முற்போக்குத் சிந்தனை இருந்தது. ஒவ்வொரு பிரச்னையையும் அணுகி அதை செயல்படுத்தும் விதத்தில் அவருக் கிருந்த தனித்துவம், பிரச்சனைகளை தீர்ப்பதற்கு அவர் எடுத்துரைக்கும் விளக்கங்களும் அவருடைய அனுபவத்தையும் திறமையையும் காண்போரை ஆச்சர்யப்பட வைக்கும். அவர் மறைவின் மூலம் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பு பெரிது என்றாலும் அந்த இழப்பை காம்ரேட் ஆர்எம்எஸ் வழிநடக்கும் இவ்வியக்கத் தோழர்கள் சரிக்கட்டுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் பொதுச் செயலாளராக, தலைவராக திறம்பட செயல்பட்ட தோழர் முத்துசுந்தரம் அவர்களுக்கு என் புகழஞ்சலியை காணிக்கையாக்குகிறேன்.

**தோழர் க.மீனாட்சி சுந்தரம்,**
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

தம்பி முத்து சுந்தரம் மிகப்பெரிய பேச்சாளர்.



அவருக்கு ஒரு காலத்தில் ஆசா னாக இருந்த நான் இன் றைக்கு அவருக் காக பேச வேண் டிய வாய்ப்பு கிட் டியிருக்கிறது. அவைத் தோழர் களே, நிகழ்ச்சி யிலே என்னை அழைத்து பேச வைத்திருக்கின்ற தமிழ் மாநில அரசு ஊழியர் சங்கத்தின் பொறுப்பாளர் களே, வருகை புரிந்திருக்கின்ற நண்பர்களே,

பெரியோர்களே, தாய்மார்களே, உங்கள் அனைவரையும் வணங்கி மகிழ்கிறேன். நான் தம்பி என்று சொன்னேன். தோழர் என்று சொல்லவில்லையே என்று வருத்தப்படாதீர்கள். தோழர்தான். எனக்கும் தோழர்தான். என்றாலும் அவர் மறைந்த அன்று நான் ஊரில் இல்லை. மறைந்த செய்தியை நான் தொலைக்காட்சி வழியாக தெரிந்து கொண்டு முன்னாள் செயலாளர் பாலசுப்பிரமணியன் அவர்களை தொடர்பு கொண்டு நான் இப்போதே புறப்பட்டு வந்தால் அங்கே பார்க்க முடியுமா தம்பி என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னார், தோழர் ஆர்எம்எஸ் உடற்கொடை தந்திருக்கிறார். அவரை ஆறு மணி நேரத்தில் எடுத்துச் சென்று விடுவார்கள். மாலை மூன்று மணி வரைக்கும்தான் எங்களுடைய அலுவலகத்தில் அவருடைய உடல் இருக்கும் என்றார். அதற்கு முன் திருநெல்வேலியிலிருந்து வந்து சேர முடியாது. வாகனத்தில் வந்தாலும் காலம் கடந்துவிடும். மிகவும் வருந்தினேன், அதிர்ச்சியுற்றேன், என்னுடைய அருமைத் தம்பியை இழந்து விட்டேனே என்று வருந்தினேன். ஏன் அப்படி அன்புத்தம்பி என்று சொல்லுகிறேன் என்றால், அவர் ஈரோட்டிலே, வாலிபப் பருவத்திலே, கல்வித் துறையியே சேர்ந்த போது நான் அங்கே இயக்க கூட்டம் நடத்திக் கொண்டிருந்தேன். இந்த சமுதாயத்திற்காக, ஆசிரியர் அரசு ஊழியர் சமுதாயத்திற்காக தந்திருக்கின்ற என்னுடைய வாழ்க்கை 65 ஆண்டுகள் ஆகும். 65 ஆண்டுகளாக இந்த களப்பணியிலே ஒரு போராளியாக இருந்துகொண்டிருக்கிறேன். பல்வேறு சாதனைகளை நான் சாதித்து முடித்திருக்கிறேன். தோழர் நன்மாறன் தம்பி அவர்கள் என்னை, 'நான் இவரை படத்திலேதான் பார்த்திருக்கிறேன் நேரில் பார்த்ததில்லை இப்போதுதான் பார்க்கிறேன்' என்று சொன்னார். நான் அவரை பலமுறை பார்த்திருக்கிறேன். பேசியதில்லை. அவ்வளவுதான். தூரத்திலிருந்து பார்த்திருக்கிறேன். ஆக, எதனாலே அவரை தம்பி என்று சொன்னேன் என்றால் சென்னையிலே 2014ல் ஒரு மாநாட்டை போடுகிறோம். மிகப்பெரிய போராட்டம் ஒன்று சேப்பாக்கத்திலே ஆசிரியர் மன்றம் நடத்தியது. அதற்கு நான் அவரை அழைத்திருந்தேன். சிறப்பு அழைப்பாளராக வந்து பேசுமாறு அழைத்திருந்தேன். அப்போது அவர் பேசும்போது சொன்னார், அய்யா மீனாட்சி சுந்தரம் அவர்கள் எனக்கு பேச்சுக் கலையில் ஆசிரியர். நான் பணி புரிந்துகொண்டிருந்த போது இயக்கக் கூட்டத்தை அவர் நடத்துகின்றபோது நான் எதிரே சென்று கீழே அமர்ந்து, அப்போதெல்லாம் இதுபோன்ற நாற்காலிகள் போடுவதில்லை. கீழே அமர்ந்து அவருடைய பேச்சைக் கேட்டு ரசித்து, அவருடைய பேச்சிலே உள்ள முக்கியமாக கருத்துக்களையெல்லாம் குறித்துக்கொண்டு, அதற்குப்பின்னாலே வந்து அவரை பாராட்டியவன் நான், கூட்டம் முடிந்துவிட்ட பின்னாலும் இருந்து பாராட்டிவிட்டு வந்தவன் என்று அவர் சொன்னார். நான் இறுதியிலே உரையாற்றுகின்றபோது சொன்னேன், முத்து சுந்தரம் அப்படிச் சொன்னார். முத்து சுந்தரம் அரசு ஊழியர் சங்கத்தின் சொத்து. அந்த முத்துசுந்தரம் என்னைப் பார்த்து ஆசிரியர் என்று சொன்னார். அப்ப நான் ஆசிரியர் அவருக்கு. இப்ப அவருக்கு நான் மாணவன். இப்ப என்னுடைய பேச்சையெல்லாம் தட்டிக்கிட்டு போயிட்டார். உசரத்துல போயிட்டார். சாதாரணமான பேச்சாளர் இல்லை. உருவம்தான் இப்படி இருக்கும். ஆனால் அவருடைய வாயிலிருந்து வருவதெல்லாம் தீப்பொறியாக இருக்கும். பேச்சிலேயே நகைச்சுவை கலந்து பேசுவார். மிமிக்கிரி பண்ணுவார். அவர் மிமிக்கிரி பண்ணி பாத்திருக்கேன். வானிலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ரமணன் பேசுவாரே, அதை மிமிக்கிரி பண்ணிக் காட்டுவார் அப்படியே. எதிரே ஒரே கைத்தட்டலாக இருக்கும். நல்லா சுடேற்றி பேசிக்கொண்டு வருகின்றபோது அந்த வெப்பத்தை சற்றே தணிய வைப்பதற்காக இடையே ஒரு நகைச்சுவையை விடுவார். மிகச்சிறப்பாகப் பேசுவார். தீவுத்திடலிலே மேடையிலே பேசும் போது அன்று அவர் வைத்த கோரிக்கைகளை அன்றைய முதல்வரிடத்திலே எடுத்து வைத்த கோரிக்கைகளை எல்லாம் நினைத்துப் பார்க்கிறேன். நான் ஒரு முறை 1973ல் திருவண்ணாமலையில் ஒரு மாநாட்டைக் கூட்டி அந்த மாநாட்டிலே பேசுகின்றபோது, முதல்வர் கலைஞர் அவர்களை, முதல்வர் கலைஞர் அவர்களே நீங்கள் மக்கள் அனைவருக்கும் தாய் பொறுப்பில் இருப்பவர். முதல்வராக ஆகும் வரைதான் நீங்கள் ஒரு கட்சிக்குச் சொந்தம். முதல்வராகிவிட்டால் அதன்பிறகு மக்களுக்குச் சொந்தம். மக்கள் அனைவருக்கும் நீங்கள் தாயைப் போன்றவர். ஒரே ஒரு கோரிக்கை நான் ஆசிரியர் அரசு ஊழியர் சார்பாகச் சொன்னேன். அது என்னவென்றால் கடலிலே மீன் பிடிக்கச் செல்லுகின்ற மீனவர்கள் வழியிலே இறந்துவிட்டால் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு ஒரு நிதியைத் தருகிறீர்கள். வரவேற்கிறேன். அதேபோல தென்னை மரத்திலே ஏறி காய் பறிக்கின்றவர்கள் நழுவி கீழே விழுந்து இறந்துவிட்டால் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறீர்கள். ஆனால் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் பணிக் காலத்தில் இறந்து விட்டால் அவர்கள் குடும்பத்தை காப்பாற்றுவதற்கு அரசு நிதியுதவி செய்ய வேண்டும் என்றேன். கலைஞர் அதை ஏற்றுக்கொண்டார்.

(நினைவலைகள் தொடரும்)

தொகுப்பு : ஜிஜி

# ஜாக்டோ-ஜியோ போராட்டங்கள்

ஜாக்டோ-ஜியோ முடிவின்படி 24.11.2017 அன்று தமிழகம் முழுவதும் அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### திருச்சி

மாநகர் வட்டத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு 500க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்ட பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தங்கமணி துவக்கவுரையாற்றினார். முனைவர் பால்பாண்டி கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் எம்.கென்னடி, துணைத் தலைவர் லட்சுமணன், இணைச் செயலாளர்கள் எலிசபெத்ராணி, மாணிக்கம், பழனிச்சாமி, தினகரன், ஆசிரியர்கள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் கோபிநாதன், மகேஷ், ஏசுராஜன், முருகேசன், ஹேமலதா மற்றும் சித்ரா ஆகியோர் வாழ்த்தி பேசினர். கேசவமூர்த்தி நன்றி கூறினார்.

### கரூர்

கரூர், குளித்தலை, கிருஷ்ணராயபுரம், கடவூர், அரவக்குறிச்சி ஆகிய தாலுகா அலுவலகங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கரூர் தாலுகா அலுவலகம் முன்பு நடைபெற்றற ஆர்ப்பாட் டத்தில் மாவட்ட துணைத் தலைவர் மு.சுப்பிர மணியன் தலைமையேற்றார். துறைவாரி சங்க நிர்வாகிகளான ஏ.ஜீவானந்தம், தாமோதரன், கே.சக்திவேல், ரத்னமாலா, கருணாகரன், பாலசுப்பிரமணியன், செல்வராஜ், செல்வன், பாலகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினர். இதில் 125 பேர் பங்கேற்றனர்.

குளித்தலையில் மாவட்ட பொருளாளர் பொன்.ஜெயராம், மாவட்ட துணைத்த லைவர் வெங்கடாச்சலம் மற்றும் வட்டக்கிளை நிர்வாகிகள் உட்பட 75 பேர் பங்கேற்றனர்.

அரவக்குறிச்சியில் மாவட்ட நிர்வாகி சிவகாமி, சத்துணவு சங்கத்தின் வி.டி.ராஜேந்திரன், வட்டக்கிளை நிர்வாகிகள் தங்கப்பாண்டியன், இளங்கோ, ராஜேந்திரன், ரஹமத்துல்லா ஆகியோர் பங்கேற்றனர். இதில் 75 பேர் பங்கேற்றர்.

கிருஷ்ணராயபுரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆய்வக நுட்பனர் சங்க மாநிலச் செயலாளர் செல்வராணி, வட்டக்கிளை நிர்வாரிககள் பழனிச்சாமி, முருவாயி உட்பட 60 பேர் பங்கேற்றனர்.

கடவூரில் மாவட்டத் தலைவர் எம்.மகாவிஷ்ணன் தலைமையேற்றார். வட்டக்கிளை நிர்வாகிகள் பிரேம்குமார் சீரங்கன் உட்பட 75 தோழர்கள் பங்கேற்றனர்.

### நீலகிரி

உதகை, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் ஆகிய 4 வட்டக் கிளைகளில் நடைபெற்றது. உதகையில் குமார்ராஜா, மாரியப்பன் ஆகியோர் தலைமை யேற்றனர். 50 பெண்கள் உட்பட 230 பேர் பங்கேற்றனர்.

குன்னூரில் கோவிந்தம்மாள் தலைமையில் நடைபெற்றது. 22 பெண்கள் உட்பட 45 பேர் பங்கேற்றனர்.

கோத்தகிரியில் அய்யனார், பாலசுப்பிர மணியன் தலைமையில் நடைபெற்றது. 50 பெண்கள் உட்பட 100 பேர் கலந்து கொண்டனர்.

கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டக் கிளையில் சலீம், அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. 80 பெண்கள் உட்பட 190 பேர் பங்கேற்றனர்.

இதுதவிர தமிழகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்ற ஆர்ப்பாட்டங்கள் அனைத்து அரசு அலுவலகங்கள் முன்பும், தாலுகா அலுவலகங்கள் முன்பும் நடைபெற்றன. இந்தப் போராட்டத்தில் துறைவாரி, பிரிவுவாரி, அரசு ஊழியர் சங்கம், ஆசிரியர் அமைப்புகளை சேர்ந்த தலைவர்களும், நிர்வாகிகளும் பங்கேற்று கண்டன உரையாற்றினர். ■

**மரம் வளர்ப்போம்**
**மழை பெறுவோம்**

# அகில இந்திய மாநாட்டு நிதி சேகரிப்பு தொடங்கியது!

# கடையேழு வள்ளல்களையும் பின்னுக்குத் தள்ளிய கொடையாளிகள்!

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16வது தேசிய மாநாடு இந்தமுறை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்த வேண்டும் என்ற பெரும் பொறுப்பு நம் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தோழர் ஆர்.எம்.எஸ்.அவர்களின் வழிகாட்டுதலும், நெறிப்படுத்தலும் இல்லாமல் முதன்முறையாக அகில இந்திய மாநாட்டை யாரும் குறைகூறிவிட முடியாத அளவுக்கு சிறப்பாக நடத்திட வேண்டிய அவசியம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கும், வட்ட, மாவட்ட, மாநில நிர்வாகிகளுக்கும் மற்றும் துவைாரி, பிரிவுவாரி சங்க நிர்வாகிகளுக்கு ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே தொடர்ந்து போராட்ட களத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு ஊழியர் சங்கம் போராட்டம் நடத்திட தமிழகம் முழுவதிலும் உள்ள அரசு ஊழியர்கள் நிதியுதவி செய்து வந்திருக்கும் நிலையில் மேலும் அவர்களை நிதிச் சுமையில் ஆளாக்குகிறோமே என்ற கவலை இருந்தது. உண்மையில் சொல்லப் போனால் இவ்வளவு பெரிய மாநாட்டை சிறப்பாக நடத்திட தேவையான நிதி மற்றும் பொருளுதவிகள் நமது சங்கத்திற்கு கிடைக்குமா என உள்ளூர பயத்துடனேயே மாநாட்டு வேலைகளை தொடங்கிய நமக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கும் விதமாக நன்கொடைகள் வர ஆரம்பித்துள்ளன.

ஊதிய மாற்றத்தின் காரணமாக ஏற்கெனவே 21 மாத இழப்புகளை சந்தித்துள்ள நிலையிலும், சில தோழர்கள் 22வது மாத நிலுவைத் தொகைகூட அரசு ஊழியர் சங்கத்தின் போராட்டம் இல்லாவிட்டால் கிடைத்திருக்காது, அதனால் ஒரு மாத நிலுவைத் தொகையை மாநாட்டு நிதிக்காக வழங்குவதாக அறிவித்து செய்திகள் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் அனுப்பியுள்ள வாட்ஸ் ஆப் செய்திகளை அப்படியே பதிவிடுகிறோம். நம்மைப் பொறுத்தவரை கடையேழு வள்ளல்களைவிட 21 மாத ஊதிய வித்தியாச இழப்பு கிடைக்குமா கிடைக்காதா எனத் தெரியாத நிலைமைக்குப் பின்னரும், உற்சாகமாக நிதியளிக்கும் ஊழியர்களே உண்மையான வள்ளல்களாகத் தெரிகிறார்கள். மனமுவந்து மாநாட்டு நிதி வழங்கும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் கரம் உயர்த்தி வீர வாழ்த்துக்களை தெரிவிக்க தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கடமைப்பட்டுள்ளது.

**(வாட்ஸ்ஆப் பதிவுகள்)**

*அன்பார்ந்த தோழர்களே கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு நிர்வாகத்தில் ஏற்பட்ட பல்வேறு கோளாறுகள் காரணமாக பணி நிரந்தரம் செய்யப்படாமல் 15 ஆண்டுகள் வரை ஊதிய உயர்வு பெறாமல் அரசு ஊழியர் சங்கம் அவ்வப்போது போராடி ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பெற்றுக் கொடுத்த அகவிலைப் படியை ஆண்டு ஊதிய உயர்வாக நினைத்து வந்த காலக்கட்டத்தை கடந்து மொத்தமாக 15 ஊதிய உயர்வு பெற்றபோதுகூட ஒரே நேரத்தில் ரூ.8,000/- ஊதியம் கூடுதலாக கிடைக்கவில்லை. ஆனால் நாம் நடத்திய ஒன்றுபட்ட போராட்டத்தின் காரணமாக செப்டம்பர் மாதம் பெற்ற ஊதியத்தை விட அக்டோபர் மாதம் ரூ.8,000/-க்கும் மேல் கூடுதலாக பெறப்போகிறேன். எனவே, ஜாக்டோ - ஜியோ போராட்ட குழுவிற்கு நன்றியை தெரிவிப்பதுடன் AISGEF தேசிய மாநாட்டிற்கு எனது பங்களிப்பாக ரூ.10,000/- வழங்குகிறேன்.*

- **து.இளவரசன்**, நாகை.

*இன்று ஊதிய நாள். ஊதிய மாற்றத்தில் புதிய ஊதியம் பெற்றேன். நான் அரசு பணிக்கு வந்து முதல் ஊதிய மாற்றம். இதில் மாதம் 4000 ஆயிரம் ரூபாய் கூடுதலாக கிடைக்க பெற்றேன். ஜாக்டோ-ஜியோவின் உன்னதமான போராட்டத்தினால்தான் எனக்கு இந்த ஊதிய உயர்வு கிடைத்தது. இந்த போராட்டக் களத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த போராட்டத்தில் நானும் கலந்து கொண்டேன் என்ற பெருமையோடும், மன நிம்மதியோடும் இந்த மாதத்தில் இருந்து புதிய ஊதியத்தை பெறுகிறேன்.*

*மேலும் எனது ஊதிய மாற்றத்திற்காக பாடுபட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை உள்ளடக்கிய "அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்''தின் 16-வது தேசிய மாநாடு சென்னையில் நடைபெறுவதை ஒட்டி" நாகை அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் 03.11.17 ஞாயிறு மாலை 03.00 மணிக்கு நடைபெறவுள்ள "நிதி சேகரிப்பு துவக்க விழா"-வில் பங்கேற்று நமது அரசு அரசு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு அவர்களிடம் மாநாட்டு பணிக்காக ரூ.10,000/= (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்க உள்ளேன் என்பதை பெருமையுடனும், நன்றியுடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். சங்கத்தால் பயன்பெற்ற என்னைப் போன்று ஏனையோரும் புதிய ஊதிய மாற்றம் பெற்ற பின்னர், கடந்த மாதத்திற்கும் இம்மாதத்திற்கும் ஊதியத்தில் உள்ள அதிக*

தொகையையோ அல்லது ஒருநாள் ஊதியத்தையோ நாகை மாவட்ட அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளிடமோ அல்லது 03.12.17 அன்று பொதுச் செயலாளரிடமோ நேரில் வழங்குவார்கள் என நம்புகின்றேன் / வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

- **ஏ.ட்டீ.அன்பழகன்,**
மாவட்டச் செயலாளர்,

திருவண்ணாமலை அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் மாவட்டத் தலைவர் கோ.வேடியப்பன் AISGEF மாநாட்டு நிதியாக ஒரு மாத ஊதியம் வழக்குவதாக தெரிவித்து முதல் தவணையாக ரூ.10000/- வழங்கினார்.

தோழர் குரு பிரசாத் வழியில் எனக்கு ஊதியக் குழு நிலுவை தொகை ரூ.8,323 வந்தது. இத்தொகை மாதாமாதம் எனக்கு கூடுதலாக கிடைக்கும். எனவே ஒரு மாத ஊதிய நிலுவைத் தொகையினை அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளன மாநாட்டிற்கு நன்கொடையாக மனமுவந்து வழங்குகிறேன்.

- **பொன்.ஜெயராம்,**
மாநிலப் பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக
அலுவலர்கள் சங்கம்

# நாகையில் அகில இந்திய மாநாடு நிதி

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 16ஆம் தேசிய மாநாடு சென்னையில் எதிர்வரும் 2018 ஏப்ரல் 5 முதல் 8 வரை நடைபெறுவதை ஒட்டி நிதி சேகரிப்பு இயக்கம் துவக்க விழா 03.12.17 அன்று நாகை மாவட்ட அரசு ஊழியர் சங்கம் சார்பில், நாகை அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் வரவேற்புரையாற்றினார். வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநிலச் செயலாளர் எல்.பிரேம்சந்திரன், கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாவட்டப் பொருளாளர் கு.தமிழ்வாணன், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாவட்டத் தலைவர் எஸ்.ஜோதிமணி, சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் எஸ்.கலைச்செல்வன், சாலைப் பணியாளர் சங்க மாநிலச் செயலாளர் எஸ்.கணேசன், தனியார் கல்லூரி அலுவலர் சங்க மண்டல துணைத் தலைவர் எஸ்.இராஜேந்திரன், வட்ட நிர்வாகிகள் சி.வாசுகி (தரங்கம்பாடி), என்.புகழேந்தி (கீழ்வேளூர்), எம்.இராமச்சந்திரன் (குத்தாலம்), எஸ்.தென்னரசு, சி.குருபிரசாத் (மயிலாடுதுறை), சி.பாலசுப்பிரமணியன், எம்.தமிழ்வாணன் (நாகப்பட்டினம்), ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நிதி வழங்கி வாழ்த்துரை வழங்கினர். மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர்ராஜன் சிறப்புரையாற்றினார். அந்த மேடையில் சேகரிக்கப்பட்ட ஒரு லட்சம் ரூபாயை மாவட்டப் பொருளாளர் பா.ராணி, பொதுச் செயலாளர் மு.அன்பரசுவிடம் வழங்கினார். "புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்தல், தொகுப்பூதியம், மதிப்பூதியம் ஒழித்தல் மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புதல் " ஆகிய மூன்று பிரதான கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறவுள்ள அகில இந்திய மாநாடு வெற்றிபெற தமிழகத்தின் அனைத்து அரசு ஊழியர்களும் ஒத்துழைக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்து பொதுச்செயலாளர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். இறுதியாக மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றி கூறினார்.



## தோழர் சுகுமால் சென் அவர்களின் மறைவு

## இந்திய அரசு ஊழியர்கள் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியா இழப்பு!



2017ஆம் ஆண்டு இந்தியா முழுவதிலும் உள்ள உழைக்கும், தொழிலாள விவசாய மக்களுக்கு அதிலும் குறிப்பாக அரசுத் துறைகளில் பணியாற்றும் ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் போன்றவர் களுக்கு ஒரு கறுப்பு ஆண்டா கும். அரசு ஊழியர்கள் மற்றும் அரசு சார்புடைய துறைகளில் பணியாற்றிய ஊழியர்களின் உரிமைகளுக்காக, கௌரவ மான ஊதியத்திற்காக, வாழ்வா தாரங்களுக்காக தங்கள் வாழ் நாட்களை அர்ப்பணித்துக் கொண்ட இரு பெரும் தலைவர்களை இழந் திருக்கக்கூடிய பெரிய சோகம் இந்தியா முழுவதி லும் உள்ள அரசு ஊழியர்களை உலுக்கி இருக்கிறது.

தமிழகத்தின் தென்மாவட்டம் ஒன்றில் பிறந்து கல்வித் துறையில், பணியில் சேர்ந்து அரசு ஊழியர் மற்றும் ஆசிரியப் பெருமக்களுக்களின் உரிமைகளுக்காக கடுமையாகப் போராடி அரசுத் துறை ஊழியர்கள் அனைவரும் ஒரளவுக்கேனும் இன்று கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்கு அயராது உழைத்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக, தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் சுற்றுப்பயணம் மேற் கொண்டு கடமையாற்றி, தன் அயராத உழைப்பு மற்றும் தளராத உறுதியின் காரணமாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராகவும், அதன்பின் தலைவ ராகவும் பொறுப்பேற்று இந்தியா முழுவதிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை உள்ள அரசு ஊழியர்களின் மத்தியில் நீங்காப் பெயரும் புகழும் பெற்று ஊழியர்கள் மத்தியில் விடிவிளக்காக விளங்கிய தோழர் ஆர். முத்துசுந்தரம் எனும் ஆணிவேர் சாய்ந்து, அதன் துக்கத்திலிருந்து இந்தியா முழுவதிலும் உள்ள அரசு ஊழியர்கள் துயரத்தில் ஆழ்ந்திருந்த வேளையில் தோழர் ஆர்.எம்.எஸ். அவர்கள் மறைந்த நான்கு மாதங்கள் நிறைவுறும் வேளையில் இன்னொரு இடி செய்தியாக அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேள னத்தின் கௌரவத் தலைவராக இருந்த தோழர் சுகுமால்சென் அவர்களின் மறைவுச் செய்தி வந்து சேர்ந்தது.

ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களாக அரசுத் துறைகளில் இந்தியா முழுவதிலும் பணி யாற்றிவரும் ஊழியர்களின் வாழ்வுக்காக, வளர்ச்சிக்காக, உரிமைகளுக்காக அரசாங்கங் களுடன் சமரசமற்ற போராட் டங்கள் நடத்தி அரசு ஊழியர்கள் அனைவருக்கும் அரணகளாக இருபெரும் தூண்களாக விளங்கிய இருபெரும் இமாலயத் தலைவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும்.

தோழர் சுகுமால்சென் அவர்களைப் பொறுத்த வரையில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் உருவாகக் காரணமாக இருந்த தலைவர்களில் முக்கியமானவர். பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றிய போதும், அவர் அரசு ஊழியர்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந் தவர். உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து இந்திய அரசு ஊழியர் களின் பணி நிலைமை, உரிமை கேட்பு, போராட்ட குணம் போன்றவற்றை உலக நாடுகளுக்கு அறியச் செய்தவர். அதேபோல உலகம் முழுவதி லும் உள்ள உழைப்பாளி மக்களின் பிரச்னைகள் அதற்கான காரணம் மற்றும் தீர்வுகளை பல நாடுகளில் நடைபெற்ற பல்வேறு மாநாடுகளிலும் தொடர்ந்து எடுத்தியம்பியவர். 1990களில் இந்தியாவில் புகுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கைகளை ஆரம்பம் முதலே எதிர்த்த இரட்டை குழல் துப்பாக்கிகளாக தோழர் சுகுமால் சென்னும், தோழர் ஆர்.எம்.எஸ். அவர்களும் இருந்தனர்.

இவர்களின் கணிப்பை ஆரம்ப கட்டத்தில் மறுத்துப் பேசிய அரசியல்வாதிகள், உலகம் முழுவதிலும் புதிய பொருளாதார கொள்கை செயல்படுத்திய நாடுகள் பொருளாதார

நெருக்கடியில் சிக்கியபோது அதன் பின்விளைவு களை உணர ஆரம்பிக்க வழிவகுத்தது தோழர் சுகுமால் சென் அவர்களின் பேச்சுக்களும், அறிக்கைகளும். ஒரு கம்யூனிசவாதியாக, ஜோதிபாசு போன்ற பெரிய ஆளுமைகளின் நண்பராக, எளிமையான மனிதராக இருந்த சுகுமால் சென் அவர்கள் தோழர்கள் ஜோதிபாசு, ஆர்.எம்.எஸ். ஆகியோரைப் போலவே தன் இறப்பிற்குப் பின் தன் உடலை மருத்துவ ஆராய்ச்சிக்காக வழங்கியுள்ளார்.

தோழர் சுகுமால் சென் அவர்களின் மறைவு இந்திய அளவில் அரசுத் துறைகளில் பணியாற் றும் ஊழியர்களுக்கு, ஊழியர் சங்க இயக்கங் களுக்கு ஒரு பேரிழப்பு என்றாலும் அவர் விதைத்துச் சென்றுள்ள விதைகள் அவரைப் போல இன்னும் ஆயிரமாயிரம் சுகுமால் சென் களாக உருவெடுக்கும் என்பதில் ஐயமில்லை. தோழரின் பிரிவில் வாடும் அவருடைய குடும் பத்தினருக்கு, உறவினர்களுக்கும், அவர் கொள்கை வழியினை பின்பற்றிய போராளி களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாகவும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தமிழகப் பிரிவின் சார்பாகவும் தெரிவித்துக் கொண்டு மறைந்த பெருந்தோழருக்கு வீரவணக்கங்களை அஞ்சலியாக்குகிறோம்.

**- மு.அன்பரசு**



***22.11.2017 அன்று சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய அலுவலகமான எம்.ஆர்.அப்பன் இல்லத்தில் தோழர் சுகுமால் சென் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்ற தலைவர்களும், தோழர்களும்.***

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com